விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை (09.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

க.பொ.த சாதாரண
பரீட்சைக்குத் தோற்றும்
அனைத்து மாணவர்களும்
சிறந்த பெறுபேறுகளைப்
பெற வாழ்த்துகின்றோம்
வலம்புரி
கல்விப் பிரிவு

# அரசுடன் இணைந்தார் திஸ்ஸ அத்தநாயக்க!

(கொழும்பு)

*ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.*

*நீண்ட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகித்த திஸ்ஸ அத்தநாயக்க தனது இராஜினாமாக் கடிதத்தை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று கையளித்ததுடன் மகிந்தவை நேரில் சந்தித்து அவருக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார்.*

24ஆம் பக்கம் பார்க்க....



## கை கொடுக்க மறுத்த மைத்திரி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த கைகொடுக்கும் போது அதனை மைத்திரிபால சிறிசேன மறுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச மனித உரிமை நாள் கிளிநொச்சியில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேசமனித உரிமைகள்நாள் ஒன்றுகூடல் நாளை புதன்கிழமை காலை 11 மணிக்கு கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாட்டை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

இம்முறை சர்வதேச சமூகமானது பெண்கள், சிறுவர்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுக்க அணி திரண்டுள்ளது.

சர்வதேச சமூகத்தோடு கரங்கோர்த்து பெண்கள் சிறுவர் மீதான வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதோடு தமிழர் தாயகம்

24ஆம் பக்கம் பார்க்க....

## வேட்புமனுத் தாக்கல் நேற்று முடிவடைந்தது



(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரி பால சிறிசேன ஆகியோரின் வேட்பு மனுக்களை நிராகரிக்குமாறு முன்வைக்கப்பட்ட இரண்டு ஆட்சேபனைகளை நிராகரிப்பதாக தேர்தல்கள் ஆணை யாளர் மகிந்த தேசப்பிரிய நேற்று அறிவித்தார்.

நேற்று ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் 2015 ஆம ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்த பின்பு இந்த ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன. டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன, மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும், நாத் அமரகொன் என்பவரினால் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்திருந்தனர்.

ஆயினும் இந்த இரண்டு ஆட்

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய செயலாளர் நியமனம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க குறித்த பதவியை ராஜினாமா செய்து ஆளுங்கட்சியின் நேற்று இணைந்ததை அடுத்து இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-11)

## செல்வாக்குக்கும் மக்களுக்கும் இடையிலேயே போராட்டம்

### பொது வேட்பாளர் மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)


ஆயுதங்கள், செல்வாக்கிற்கும் மக்களுக்கும் இடையிலான போராட்டமே இந்த தேர்தல். அகிம்சாவாத தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தான் முன்னெடுப்பதாக பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடக

23ஆம் பக்கம் பார்க்க....

## 150 கிலோ கஞ்சா வல்வையில் மீட்பு

### ஐவர் வசமாக மாட்டினர்



(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து படகு மூலம் கடத்திவரப்பட்ட 150 கிலோ கஞ்சாவை வல்வெட்டித்துறைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வல்வெட்டித்துறை பொலிகண்டி கடற்கரையோரத்தில் சந்தேகத்திற்கிடமாக தரித்து நின்ற படகு ஒன்றை சோதனையிட்ட போது அதில் கஞ்சாப் பொதிகள் மறைத்து

24ஆம் பக்கம் பார்க்க...

## ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் இன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

பகல் 11 மணியளவிலிருந்து நண்பகல் 12 மணி வரை யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

கல்வியில் அரசியல் தலையீட்டினை நிறுத்த கோரியும் வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்கு 6 சதவீதம ஒதுக்கக் கோரியும் மற்றும் சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கையினை முன்வைத்து மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. (எ-4)

## பாப்பரசரின் பயணத்தை பிற்போடக் கோரிக்கை

(கொழும்பு)

புனித பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைக்கான பயணத்தை பிற்போடுமாறு கத்தோலிக்க மத குருமார் சிலரும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளதாக ஏபி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

புனித பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைக்கான பயணத்தை அண்மித்து, இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் வன்முறைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்பதாலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களுக்கு பின்னர் வன்முறைகள் இடம்பெற்றதை சுட்டிக்காட்டி, ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் கொந்தளிப்பான சூழலில் பாப்பரசர் வருகை தருவது அவரின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்று ஆயர்களுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கத்தோலிக்கத் தலைவர் வண.லியோ பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடக்க

24ஆம் பக்கம் பார்க்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அர்ஜுன ரணதுங்கவுக்கு அமைப்பாளர் பதவி!

## சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்குள் இருந்து மைத்திரிபால சிறிசேனவை வெளியே கொண்டு வந்து, எதிரணியின் பொதுவேட்பாளராக நிறுத்திய இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளார்.

நேற்று முன்தினம் அத்தனகலவில் நடந்த கூட்டம் ஒன்றில், முன்னாள் துடுப்பாட்ட வீரரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரண்துங்கவை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல தொகுதி அமைப்பாளராக நியமிப்பதாக சந்திரிகா அறிவித்துள்ளார்.

அத்தனகல தொகுதி பண்டாரநாயக்க குடும்பத்தின் சொந்த தொகுதியாகும். இந்த தொகுதி அமைப்பாளராக அர்ஜுன ரணதுங்கவை நியமிப்பதாக அறிவித்துள்ள சந்திரிகா, இந்தப் பதவிக்கு அவரைவிடப் பொருத்தமானவர் வேறெவரும் இருக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

போரில் ஈட்டிய வெற்றியை வைத்து தற்போதைய அரசாங்கம் மிகப் பெரியளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் சந்திரிகா குற்றம்சாட்டியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல அமைப்பாளராக அர்ஜுன ரணதுங்கவை சந்திரிகா அறிவித்துள்ளதன் மூலம், அவர் கட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கான போரைத் தொடங்கியுள்ளார் என்று கருதப்படுகிறது.

ஏற்கெனவே மைத்திரிபால சிறிசேனவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக்கும் வரை ஓய மாட்டேன் என்று சந்திரிகா பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கிடையே, அர்ஜுன ரணதுங்கவை அத்தனகல தொகுதி அமைப்பாளராக நியமிக்கும் அதிகாரம், சந்திரிகா குமாரதுங்கவுக்கு கிடையாது என்று, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (எ-11)

# தொண்டமான் மோ.சைக்கிள் பேரணி



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவை தெரிவித்து மோட்டார் சைக்கிள் வாகன பேரணி ஒன்று நேற்று கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இவ் வாகன பேரணி கொட்டகலையிலிருந்து தலவாக்கலை, நகர வழியாக பூண்டுலோயா, கொத்மலை ஆகிய பிரதேசங்களை சென்றடைந்தது.

இந்த மோட்டார் சைக்கிள் பேரணியில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுடன் பெருமளவிலான மூவின மக்களும் கலந்து கொண்டனர். (எ-11)

# பரப்புரைக் கூட்டங்களை நடத்த முடியாத நிலை!

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பிலும் ஏனைய முக்கிய இடங்களிலும் எதிரணி சார்பில் பாரிய தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்த முடியாத வகையில், அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பிலும் ஏனைய முக்கிய இடங்களிலும் பாரிய அரசியல் கூட்டங்கள்ள நடத்தக் கூடிய மைதானங்களை அரசாங்கம் தமது ஆதரவாளர்களின் பெயரில் முன்பதிவு செய்துள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் அமைப்பின் தேசிய இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் பயன்படுத்தும் மைதானங்கள் மற்றும் இடங்களை முன்பதிவு செய்ததன் மூலம்,அரசாங்கம் மாற்றுக் குரல்களை ஒடுக்க முயல்வதாக குறிப்பிட்ட அவர், இது மிகப்பெரிய தேர்தல் வன்முறை என்றும் அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக கொழும்பு மாநகரப் பகுதியை இலக்கு வைத்தே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அத்துடன், மகரகம பகுதி மைதானங்களும் இவ்வாறு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி மைதானங்கள் அனைத்தும கடந்த வாரம் பல்வேறு நபர்களின் பெயர்களில் முன்பதிவு செய்யப்பட்டதால் எதிர்க்கட்சிகளால் எந்தக் கூட்டத்தையும் நடத்த முடியவில்லை. அதேவேளை, இவ்வாறு முன்பதிவு செய்யப்பட்ட மைதானங்களில் எந்த நிகழ்வுகளும் நடத்தப்படவில்லை.

இந்தநிலை நீடித்தால் தேர்தல் ஆணையாளர் தலையிட வேண்டும் என்று தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் அமைப்பின் தேசிய இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜேவிபி ஆகிய கட்சிகளும் கண்டனம் வெளியிட்டுள்ளன. (எ-11)

# 27 கூட்டங்கள் 200 சந்திப்புக்கள்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினால் 27 கூட்டங்களும் 200 மக்கள் சந்திப்புக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர்கள் பங்குகொள்ளும 160 பிரதான கூட்டங்களும் 14 ஆயிரத்து 200 கிராமிய மக்கள் சந்திப்புக்களும் 12 ஆயிரதது 002 தேர்தல் கூட்டங்களும் நடத்தப்படவுள்ளன.

இவற்றில் 27 கூட்டங்களும் 200 சந்திப்புக்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளன. இதுதவிர வீட்டுக்கு வீடு செல்லும் நடவடிக்கை மூன்று தடவைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மரண அறிவித்தல்



## திருமதி லோகேஸ்வரி சண்முகபவன் (சந்திரா)

கொழும்பை பிறப்பிடமாகவும், நல்லூர் குறுக்குச் சந்தியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு பம்பலபிட்டியில் வசித்து வந்தவருமான திருமதி லோகேஸ்வரி சண்முகபவன் 06.12.2014 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (Postmaster), சிவபாக்கியம் (நல்லூர்) தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற தம்பிஐயா, ரத்தினாம்பாள் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு) தம்பதிகளின் மருமகளும், வ.த.சண்முகபவனின் (Browns & co) அன்பு மனைவியும், டிலானி (Canada), மேகலா (Canada), தரணீதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாகணேஷ் (Canada), வசந்தராஜா (Canada), வினோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஐஸ்வர்யா (Canada), அரித்திரி (Canada) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், புவனேஸ்வரி, லோகநாதன், சிவராஜா, Dr.கமலாம்பா, காலஞ்சென்ற வரதராஜா, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சுகிர்தலக்ஷ்மி, காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் திரிபுரபவன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் செவ்வாய்க்கிழமை 09.12.2014 இன்று காலை 8 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2.30 மணிக்கு கிரியைகள் நடைபெற்று மாலை 4.30 மணிக்கு தகனக் கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**No.5,E Block,**
அரச தொடர்மாடி,
பம்பலப்பிட்டி.

தகவல் :
வ.த.சண்முகபவன் (கணவர்)
0777757112, 0112586649

(சி-9310)


# தரம் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு.

எல்லா புத்தகசாலையிலும் விற்பனையாகிறது.

★ அடிப்படைத் தமிழ் வழிகாட்டி
ஆக்கம் : M.சுகந்தன் (B.A. (Dip. Tech )– சங்கானை

★ கணித விவேக வழிகாட்டி
ஆக்கம் : I.L.M. ஷபான் - அக்கரைப்பற்று

★ சுற்றாடல் சங்கமம்
ஆக்கம் : S. சுதர்சன் ( B.A- National Dip in Teach Merit - sp. Trd in Primary)

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் – கொழும்பு 13. 077 6258778

(சி-9308)


# சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

## பின்வரும் வேலைகளுக்கான கூலிக்கான கூறுவிலை கோரல்

01. தலைமைக் காரியாலயம் கூரை கழற்றி சீற்கூரையாக மாற்றிப் போடுதல்.
02. கிளை இல. 52 சித்தன்கேணி மதில் அமைத்தல்.
03. கிளை இல. 60 அராலி வடக்கு மதில் அமைத்தல்.
04. கிளை இல. 53 சுற்று வேலி கம்பிக்கட்டை அரிந்து தகரம் அடித்தல்.

மேற்கூறப்பட்ட வேலைகளுக்கான கூலிக்கான கூறுவிலை 23.12.2014 ஆம் திகதி மதியம் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். வேலைகளுக்கான விபரம் அடங்கிய படிவத்தினை 200/= செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ தலைவர் சங்கானை ப.தெ.வ.அ.கூ. சங்கம் என முகவரியிட்டு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு :- தலைமைக் காரியாலய கூரையினை அலுவலக நேரமான காலை 8.00 தொடக்கம் மாலை 4.00 மணிவரையும் நேரடியாக பார்வையிட்டு மதிப்பீடு தரவும்.

தலைவர்,
சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

(8590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் வெற்றியை உறுதிசெய்ய வேண்டும்

## சிறுபான்மையின மக்களிடம் கருணா கோரிக்கை

(கொழும்பு)

சிறுபான்மை இன மக்களைப் பலப்படுத்தி எங்களை ஒரு நல்ல நிலையில் வைத்திருக்கின்றார் என்றால் அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷதான் என பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதான வீதியில் ஜனாதிபதி தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் காரியாலயம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட போது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்கள் அனைவரும் அணி திரண்டு எங்களுடைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கின்றேன். தமிழ் மக்கள் அளிக்கின்ற வாக்குகள் எங்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்திற்காக அளிக்கின்ற வாக்குகளாகும்.

இன்று அரசாங்கத்தில் இருந்து மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன போன்றோர் வெளியேறியதால் கட்சியை பலவீனப்படுத்த முடியாது.

அவர்கள் வெளியேறினாலும் கட்சி மிகவும் பலமாகத்தான் இருக்கின்றது. தற்போது உள்ள கட்சியின் பலத்துடன் மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையும் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி. அந்த வெற்றியில் சிறுபான்மை மக்களாகிய நாங்கள் பங்காளிகளாக மாறிக் கொள்ள வேண்டும்.

சிங்கள மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நடைபெறப் போகும் தேர்தலில் 90 வீதமான வாக்குகளை அளிக்கப் போவது உறுதி. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நிம்மதியாக வாழக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தமைக்காக நன்றிக் கடன் தீர்க்கும் நோக்கில் வாக்களிக்கப் போகின்றார்கள். அவ்வாறு சிறுபான்மை மக்களாகிய நாமும் யுத்தத்தால் கஷ்டப்பட்டவர்கள் என்ற ரீதியில் இன்று நிம்மதியாக இருக்கின்றோம் என்ற ரீதியிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வாழைச்சேனை கடதாசி ஆலையின் நிறைவேற்று அதிகாரி தேசமான்ய மங்கள



சி செனரத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்குடா தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களான எஸ்.ஏ.றபீல், எஸ்.எம்.சந்திரபால, ஜனாதிபதி செயலக அதிகாரி பி.ஜி.தயானந்த மற்றும் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-5)

## மூத்த பிரஜைகளின் நிகழ்ச்சி திட்டங்களுக்கு 2014 இல் 9 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

### இமெல்டா சுகுமார் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள மூத்த பிரஜைகளுக்கு மனநிலை மேம்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் ஆலோசனை வழங்கவும், ஓய்வு பெறவுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு முன்ஓய்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், மூத்த பிரஜைகள் பராமரிப்பு சேவை பயிற்சி திட்டங்களுக்கும் 2014 ஆம் ஆண்டு 9 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதியோர்களின் நலன் தொடர்பில் சமூக சேவை அமைச்சால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேற்படி திட்டங்கள் தவிர, முதியோர் இல்லங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 2.77 மில்லியன் ரூபா



வும், மூத்த பிரஜைகள் காப்பாளர் திட்டத்தின் கீழ் ஆதரவற்ற மூத்த பிரஜைகளுக்கு ஒரு இலட்சத்து 89 ஆயிரம் ரூபாவும், கதிர்காமம், கைதடி, சாலியபுர, மீரிகம ஆகிய இடங்களிலுள்ள அரச முதியோர் இல்லங்களை புனரமைக்க 200 மில்லியன் ரூபாவும் செலவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## மரண அறிவித்தல்

### திரு. சின்னத்தம்பி செல்வரத்தினம்
### (ஓய்வுபெற்ற உப அதிபர், சமாதான நீதவான்)



சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற உப அதிபர், சமாதான நீதவான்) அவர்கள் நேற்று முன்தினம் 07.12.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் 07.12.2014 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னாரின் மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (8586)

தகவல்:
குடும்பத்தினர்.

## இராசி பலன்

09.12.2014
(கார்த்திகை 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு
திருதியை முன்னிரவு 8.19 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 4.24 மணிவரை
இராகுகாலம் 3.18- 4.48 மணிவரை
சுபநேரம் 10.48- 12.18 மணிவரை

வளவன்

**மேடம்** — தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும்.

**இடபம்** — காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆனந்தமான நாள்.

**மிதுனம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், சஞ்சலங்கள் கூடும்.

**சிம்மம்** — தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், சிறப்பான நாள்.

**கன்னி** — தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்.

**துலாம்** — தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், ஆன்றோர் சந்திப்புண்டு

**விருச்சிகம்** — குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, வரவும், செலவும் சமமாகும் நாள், வேலைச்சுமை கூடும், முயற்சியில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு** — அன்பு நண்பர்கள் ஆதரவு பெருகும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மகரம்** — நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**மீனம்** — தாய்வழி உறவினர்களின் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வாகனசுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் வெள்ள அனர்த்தத்திற்கான வாய்ப்புக்கள்



நா.பிரதீபராஜா
புவியியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒபபிடும்போது வேறான காலநிலைப்பண்புகளைக் கொண்ட வடமாகாணத்தின் காலநிலைப்பண்புகளை காலநிலைப்பண்புகளை எதிர்வு கூறுவது அவ்வளவு சுலபமான விடயமன்று. எனினும் கடந்த 120 ஆண்டுகால (1891 இருந்து 2014 வரை) காலநிலைத் தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையில் சில விடயங்களை எதிர்வு கூற முடியும்.

அந்த அடிப்படையில் மழை வீழ்ச்சி வெள்ளப் பெருக்கு என்பவற்றினை ஓரளவுக்கு எதிர்வு கூற முடியும். ஆனால், அனைவரும் நினைப்பது போல் வானிலை மற்றும் காலநிலை நிகழ்வுகள் எதிர்வு கூறினால் அதன் படி நிச்சயமாக நடை பெறல் வேண்டும் என்ற விதி இல்லை ஏனெனில், உலகளாவிய ரீதியிலான காலநிலை மாற்றமும் எதிர்வு கூறப்படும் இடத்தின் வளிமண்டல இயல்புகளும் ஏனைய இடங்களின் வளிமண்டலக் குழப்பங்களும் கடல் தரை பண்புகளில் ஏற்படுகின்ற மாற்றங்களும் இவ் எதிர்வு கூறலைப் பாதிக்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

இந்த வகையில் இந்த கட்டுரை கடல் மற்றும் தரைப் பகுதி வெப்ப வேறுபாடுகள் மழைவீழ்ச்சிப் போக்கு, வங்காள விரிகுடாவின் அமுக்க வேறுபாட்டு நிலைமைகள் என்பனவற்றை கருத்திற் கொண்டும் ஏனைய பொருளாதார சமூகக் காரணிகளை அடிப்படையாகக்கொண்டும்எதிர்வரும் 70 நாட்களுக்குள் வடமாகாணம் முழுப் பகுதியும் அல்லது ஏதாவது ஒருமாவட்டம் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு எதிர்கொள்ள உள்ள வெள்ள அபாயத்தின் சாத்தியக் கூறுகளை விளக்குவதாக உள்ளது. அந்த வகையில் பின வரும் விடயங்கள் வெள்ள அபாயத்திற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன.

### வங்கக்கடலின் வளியமுக்க வேறுபாடுகள் (Air Pressure Variations in the Bay of Bengal)

இலங்கையின் வடமாகாணம் இரண்டாவது இடைப்பருவக்காற்றுக் காலத்திலும் வடகீழ்ப்பருவக்காற்று காலப்பகுதியிலும் வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற வளியமுக்க குறைவின் விளைவானதாழமுக்கத்தின் காரணமாகவே மழையை பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு (2013) இத்தகைய தாழமுக்கங்கள் எவையும் வங்காள விரிகுடாவில் ஏற்படாமையே கடந்த ஆண்டு மழைவீழ்ச்சி குறைவுக்கான காரணமாகும். இத்தகைய தாழமுக்கங்கள் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டமைக்கு கடந்த ஆண்டின் காலத்தில் பிலிப்பைன்ஸ் ஏற்பட்ட "கையன் (Hyyan)" சூறாவளியினால் ஏற்பட்ட சுழற்சியின் விளைவாக ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் வளிமண்டல ஈரப்பதத்தின் அளவு குறைக்கப்பட்டமையும் அதன் விளைவாக தாழமுக்கங்கள் விருத்தியாவதற்கு தேவையான மறைவெப்பம் (Latent Heat) கிடைக்காமையுமே பிரதான காரணமாகும்.

கடந்த 100 ஆண்டு சராசரிகளின் அடிப்படையில் இந்த இரண்டு பருவங்களின் போதும் வங்காள விரிகுடாவில் 6- 9 வரையான தாழமுக்க கலங்கள் ஏற்படுவதுண்டு. எனினும் நவம்பர் 20 தொடக்கம் அடுத்த ஆண்டின் ஜனவரி 20 வரையான காலப் பகுதி இந்த 09 தாழமுக்கங்களின் ஆகக் குறைந்தது 5 தாழமுக்கங்கள் ஏற்படுவதுண்டு. இதனால்தான் வடமாகாணம் தன்னுடைய மொத்த மழைவீழ்ச்சியில் (1250 m.m) கிட்டத்தட்ட 750mm இனை இக்காலப் பகுதிளில் பெற்றுக் கொள்கின்றது.

இந்த 2014 ஆம் ஆண்டின் இரண்டாவது இடைப்பருவத்தில் 02 தாழமுக்கங்கள் வங்கக் கடலில் உருவாகியுள்ளன. அதன் மூலம் வடமாகாணம் 300m.m கூடுதலான மழைவீழ்ச்சியை பெற்றுள்ளது. எனினும் அடுத்து வரும் 70 நாட்களுக்குள் ஆகக் குறை ந்தது 03 தாழமுக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஆகக குறைந்தது 02 தாழமுக்கங்கள் ஏற்பட்டாலே வடமாகாணம் சராசரியாக 350mm மழைவீழ்ச்சியைப் பெறும். ஏற்கனவே 90% மழைவீழ்ச்சியைப் பெற்ற வடமாகாணத்திற்கு இந்த 350mm மழைவீழ்ச்சி வெள்ள அனர்த்தத்தினை உருவாக்க போதுமானதாகும்.

### தாழமுக்க வகைப்பாடுகள்

| இல. | வகை. | காற்றின் வேகம (கி.மீ/ம) | அலை உயரம் (மீ) |
|---|---|---|---|
| 1 | தாழமுக்கம் | 31-49 | 1.25-2.5 |
| 2 | உயர் தாழமுக்கம் | 50-61 | 4-6 |
| 3 | புயல் | 62-87 | 6-9 |
| 4 | பெரும் புயல் | 88-117 | 9-14 |
| 5 | சூறாவளி | 118-167 சில சமயம் 221 வரை | 14< |
| 6 | கடுமையான சூறாவளி | 222 இனை விட அதிகம் | 14< |


### வளி வெப்பநிலை வேறுபாடுகள் (Air Temperature Variations)

தாழமுக்கம் ஒன்று விருத்தியாவதற்கு தேவையான மிக முக்கியமான காரணிகளில் வெப்பநிலை ஒன்றாகும். ஒரு இடத்தில் வெப்பநிலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் விளைவாக அவ்விடத்தில் வளியானது விரிவடைந்து அவ்விடத்தின் மையத்தில் தாழமுக்கம் ஒன்று உருவாகின்றது. புவியைப் பொறுத்தவரை மாறன் மண்டலம் வரைக்கும் உயரத்துடன் கூடி வெப்பம் குறைவடையும் அதே வேளை (1000mக்கு 6.40C என்ற அளவில்) அமுக்கமும் குறைவடைகிறது. உலக முழுவதிலும் கடலமட்ட உயரமான 0.00 m இல் வளியமுக்கமானது 1013.2 அடி ஆகவே காணப்படும். இதற்குரிய சராசரி வெப்பநிலையும் 15°C ஆகும்.

ஆனால் உயரத்தில் எவ்வித மாற்றமும் இல்லாது வெப்பநிலையில் ஏற்படுகின்ற மாற்றம் சடுதியான வளியமுக்க மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. கடந்த ஒக்டோபர் 10ஆம் திகதியிலிருந்து வங்காள விரிகுடாவின் வளி வெப்பநிலை 270C என்ற சராசரி அளவிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெப்பநிலை தாழமுக்கம் ஒன்று கடற்பகுதியில் உருவாகுவதற்கு தேவையான அளவு ஆகும். மேலும் வடகீழ்ப்பருவக்காற்று மூலம் கொண்டுவரப்படும் வெப்பநிலையும் புவி மற்றும் வளிமண்டலத்தினால் வெளியிடப்படும் நெட்டலை கதிர் வீச்சும் வழிமண்டலத்திற்குள் சுழற்சி முறையில் பரிமாற்றப்படும் மறைவெப்பமும் தாழமுக்க உருவாக்கத்தினை தூண்டுகின்றன. இதே நிலை நீடித்தால் இனிவரும் 70 நாட்களுக்குள் முன்னர் குறிப்பிடப்பட்டவாறு ஆகக்குறைந்தது 03 தாழமுக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இவை வடமாகாணத்திற்கு அதிக மழைவீழ்ச்சியைக் கொடுக்கும். எனினும் அவுஸ்ரேலியாவிற்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட ஏதாவது ஒரு பகுதியில் அது எந்த் நாட்டின் கடற்பகுதியாகவும் தரைப்பகுதியாகவும் இருக்கலாம். ஒரு வலுவான தாழமுக்கம் ஏற்பட்டால் இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்படலாம்.


வங்களா விரிகுடாவின் வளி வெப்பநிலை



### பெற்றுக் கொள்ளப்பட்ட மழைவீழ்ச்சி (Received Rainfall)

வடமாணத்தின் சராசரி (5 மாவட்டங்களும் உள்ளடங்கலாக) மழைவீழ்ச்சி 1290 mm ஆகும். எனினும் இது மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகின்றது. எனினும் இந்த ஆண்டு முழுமையான வடகீழ்ப்பருவக்காற்றின் செல்வாக்கிற்கு உட்படுவதற்கு முன்னரே வடமாகாணம் அதன் சராசரியின் 90 வீதம் இனைப் பெற்றுள்ளது. முன்னர் குறிப்பிட்டது போன்று ஏற்படவிருக்கும் தாழமுக்கங்களின் விளைவாக கிடைக்கின்ற மழைவீழ்ச்சியானது வடமாகாணத்தின் சராசரியை விடக் கூடுதலானதாக இருக்கும்.


வடமாகாணத்தின் வருட. சராசரி மழைவீழ்ச்சி





இதனால் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு வடமாகாணத்தின் வெள்ள நிலைமையை உருவாக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. வடமாகாணம் இன்னும் 45 நாட்களுக்கு வடகீழ்ப்பருவக்காற்றின் உச்சத்தினை சந்திக்கவுள்ளதால் அக்காலத்தில் ஏற்படும் தாழமுக்கத்தினால் உருவாகும் அதிக மழைவீழ்ச்சி மேலதிகமாக மரறி வெள்ள அனர்த்தத்தினை உண்டாக்கும் வாய்ப்புள்ளது.

ஏற்கனவே வடமாகாணத்தில் இதுவரை கிடைத்த அதிக அளவிலான மழைவீழ்ச்சியின் விளைவாக அநேகமான குளங்கள் உபரி நீரை வெளியேற்றும் (வான்பாய்தல்) இந்த சூழலில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி வெள்ள அபாயத்தினை உருவாக்கக் கூடிய வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 08.12.2014 அன்று முன்னறிவிக்கப்பட்டுள்ள மழைவீழ்ச்சி




எதிர்வரும் 07.12.2014 அன்று முன்னறிவிக்கப்பட்டுள்ள மழைவீழ்ச்சி




### தரைத்தோற்ற அம்சங்கள் (Geomorphological Features)

வடமாகாணத்தில் ஏற்கனவே கிடைத்துள்ள மழைவீழ்ச்சியின் விளைவாக நிலமானது நிரம்பு நிலையிலுள்ளது. (Saturated) எனவே, தொடர்ந்து வரும் காலப்பகுதியில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியானது தரை கீழ் நீராக செல்லாது மேற்பரப்பில் தேங்கி வெள்ளத்தினை உருவாக்கக் கூடிய சூழல் ஏற்படும்.

இந்த நிலையானது வடமாகாணத்தின் கல்லியல் (Geology) மற்றும் நில முகாமைதுவ நடவடிக்கைகள் (Land Managementactivities) என்பவற்றுடன் தொடர்புபட்டு இடத்துக்கிடம் வேறுபட்டாலும் வடமாகாணத்தின் பெரும்பாலான நில அமைப்பின் அடிப்படையில் உள்நாட்டு தாழ் நிலங்கள் ( Inter low-lands) நீர் நிரம்பிய நிலையில் உள்ளமையினால் இதுவும் வெள்ள அபாயத்திற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும்.

### அவிருத்திக்காரணிகள் (Development Factors)

2009 பின்னர் பல்வேறு வகைப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இவற்றில் பெரும்பாலான நடவடிக்கைகள் புவியியல் நிலைமைகளை (மண், தரைத்தோற்றம், மற்றும் காலநிலை) கருத்தில் கொள்ளாமலே மேற்கொள்ளப்பட்டன.

வடமாகாணத்தின் பருவ ரீதியாகக் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் மூலம் பெறப்படும் நீரானது குளங்களையோ அல்லது ஆறுகளையோ. அல்லது கடல்களையோ சென்றடைவதற்கு இயற்கையான பல வடிகாலமைப்புத் தொகுதிகள் வடமாகாணத்தில் காணப்பட்டன.

மழைவீழ்ச்சி மூலம் கிடைக்கும் நீரானது இவ்வடிகால்கள் மூலம் குளங்களை அல்லது ஆறுகளை அல்லது கடல்களை சென்றடைவதுண்டு.

இதனால் வடமாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள அபாயம் தவிர்க்கப்பட்டு வந்தது. ஆனால் 2009இற்கு பின்னர் வடமாகாணத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள், மதில்கள், அமைக்கப்பட்ட போக்குவரத்துப் பாதைகள் (பெருந்தெரு மற்றும் புகையிரதப்பாதை) போன்றன இந்த இயற்கையான வடிகாலமைப்பினை பாதித்துள்ளன. அல்லது இயற்கையான வடிகால்களுக்கு தடையேற்படுத்தியுள்ளன.

இதனால் மழை நீரானது தடுக்கப்பட்டு அப்பகுதியில் வெள்ள அனர்த்தங்கள் உருவாக்கப்படும் வாய்ப்புள்ளது. மேலும் பல இடங்களில் கட்டுமானத் தேவைகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட தரை உயரமாக்கல் செயற்பாட்டினாலும் வெள்ள நீர் வடிந்தோடக் கூடிய வாய்ப்புக்கள் இன்மையால் வடமாகாணத்தில் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்பினை அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஊக்குவித்துள்ளன.

இதனால் வடமாகாணத்தில் பல புதிய புதிய இடங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

### வரட்சியிலிருந்து பாடங்கற்க மறந்தமை (Lessons Forgotten due to the consequences of the Dry Weather)

கடந்த 2013 ஆம் ஆண்டு மிக கடுமையான வரட்சியை வடமாகாணம் மட்டுமன்றி முழு இலங்கையுமே சந்தித்திருந்தது.

எனினும் வரட்சிக் காலத்தின் போது நீரின் தேவையைப் பற்றி கதைத்திருந்த பலர் மழைக் காலத்தில் நீரின் முக்கியத்துவத்தினை உணரவில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு மீனவர்களின் படகுகளை விடுவிக்க மறுப்பதற்கு பா.ஜ.க.காரணம்

## ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பா.ஜ.க அரசு நடத்திய பதவியேற்பு விழாவிற்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுக்கப்பட்ட காரணத்தினால் மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் கடுமையான நிலையை இலங்கை அரசு எடுக்க காரணமாக அமைந்து விட்டது என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, படகுகள் பறிமுதல் செய்யப்படும் போது மத்திய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவதும், படகுகள் திரும்ப ஒப்படைக்கப்படுவதும் ஒரே நேரத்தில் நடந்து வந்தது. ஆனால் பா.ஜ.க.வின் முகவராக செயல்பட்டு வருகின்ற சுப்பிரமணியன் சுவாமியின் ஆலோசனையின்படி தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டார்கள்.

ஆனால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்படுவதில்லை. தற்போது 83 படகுகள் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டு திரும்ப ஒப்படைக்கபடாத நிலையில் உள்ளதற்கு பா.ஜ.க. அரசின் மெத்தனப் போக்கு தான் காரணம்.

மீனவர் பிரச்சினையில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கிற வகையில் மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

தமிழக காங்கிரஸ் தலைவராக ஞானதேசிகன் இருந்தபோது பலமுறை மீனவர் கூட்டமைப்பின் தலைவர் என்.ஜே.போஸ்,



தேவதாஸ், ஜேசு ஆகியோர் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்திக்கவும், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் பலமுறை ஏற்பாடு செய்து பேருதவி செய்திருக்கிறார்.

கடல் தாமரை மாநாடு நடத்தியவர்கள், மீனவர் நலனுக்காக தனி அமைச்சகம் உருவாக்கப் போவதாக வாக்குறுதி கூறிய தமிழக பா.ஜ.க.வினர் இன்று வாய் மூடி மௌனிகளாக மீனவர் பிரச்சினையில் இரட்டை வேடம் போடுவது ஏன்? இவ்வாறு காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## போயா தினத்தில் இறைச்சி விற்ற ஐந்து பேர் பொலிஸாரால் கைது

போயா தினமான கடந்த சனிக்கிழமை கோழி இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட கோழி இறைச்சி விற்பனையாளர்கள் ஐவரை கைது செய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய், இருபாலை மற்றும் கல்வியங்காடு ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டதுடன், விற்பனைக்காக வைத்திருந்த கோழி இறைச்சிகளையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட விற்பனையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## இருவருக்கு மரணதண்டனை

கொலைச் சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட இருவருக்கு மரண தண்டனை விதித்து வடமேல் மாகாண மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ராஜங்கனை மற்றும் அங்கமுவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இருவருக்கு இவ்வாறு நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாட்களில் இந்த கொலை இடம்பெற்றிருக்கலாம் என கூறப்பட்டுள்ளது. (இ)

## மைத்திரிக்கு ஆதரவளிக்க பிரதி அமைச்சர்கள் இருவர் எடுத்த தீர்மானம் கைவிடப்பட்டுள்ளது

மலையகத்தில் உள்ள இரண்டு பிரதி அமைச்சர்கள் எதிர்க்கட்சியின் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதற்கு எடுத்த தீர்மானம் கைவிடப்பட்டுள்ளது.

2015 ஜனாதிபதி தேர்தலில் நேற்று நடைபெற்ற வேட்பு மனு தாக்கலின் பின் எதிர்க்கட்சியின் ஜனாதிபதி பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க எடுத்த தீர்மானம் பின் தங்கியுள்ளதாக மலையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கட்சியின் பதவியிலிருந்து விலகி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவிக்க எடுத்த முடிவின் பின்னரே இந்த பிரதி? அமைச்சர்கள் இருவரும் இந்த தீர்மானத்தை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அதனால் பிரதி அமைச்சராக பதவிலிருந்து கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கே ஆதரவு வழங்க இறுதி தீர்மானம் எடுத்துள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ளது. (இ-5)


# விசேட சலுகை

**வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.**

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

**தொடர்புகளுக்கு:- 021 2217 603**
**021 5671 532**

**Valampuriijaffna@gmail.com**

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2120 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 58 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/3157 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 6<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: B.COM, HNDE/ அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3121 | பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 42 1/2 சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3162 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 56 3/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC லண்டன் (NOT PR)<br>தொ.இ: B/2123 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 33 3/4 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3167 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 16 செவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/2125 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 10<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/3168 |

# கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும் பொறிமுறைகளும் தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும் சர்வதேச மனிதவுரிமை பொறி முறைகளும் தொடர்பான செயலமர்வு ஒன்றினை சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கின்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 3 மணிவரை யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குகொள்ள விரும்பும் சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமாதான நீதவான்கள், மத்தியஸ்த சபை அங்கத்தவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டு பங்குபற்ற முடியும். பங்குபற்ற விரும்புவோர் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு, இல.01,மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் அல்லது எமது தொலைபேசி இலக்கமான 021-2222021 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ்அறிவித்துள்ளார். (இ-5)




# வடக்கு பெண்கள் வீரம்மிக்கவர்கள்

## யாழ்.இந்திய பிரதித்தூதுவர் புகழாரம்

**வடக்கு மாகாண தமிழ்ப்பெண்கள் வீரம்மிக்கவர்கள் என்பது உலகறிந்த உண்மை என யாழ்.இந்திய துணைத்தூதரக பிரதித் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.**

சுவிட்சர்லாந்து நிதியுதவியில் யாழ். சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான 16 நாட்கள் செயற்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருடங்களாக எந்தவொரு வன்முறையும் நடைபெறவில்லை. பெண்கள் எந்தவொரு நேரத்திலும் தனியாக சென்றுவந்தனர் என கூறுகின்ற இச்சமூகத்தில் இப்போது வன்முறைகள் இடம்பெறக்காரணம் என்ன?

இன்றைய இளம் சமுதாயத்தை நல்வழிப்படுத்தவேண்டிய நிலையில் உள்ளது. இப்பொறுப்பு இச்சமூகத்திற்கே உள்ளது.

தமிழக நாடகங்களில் சித்திரிக்கப்படுவது போன்று பெண்கள் அவ்வளவு கொடியவர்களல்லர்.

இவ்வாறானநாடகங்களைஅனைவரும் பார்ப்பதனை தவிர்த்துக்கொள்வது பெண்கள் பற்றிய தவறான புரிதலினை தவிர்த்துக்கொள்ளலாம்.

வடமாகாண தமிழ்ப்பெண்கள் மிகவும் தைரியமானவர்கள் என்பது உலகறிந்த உண்மை.

இங்கு பெண்கள் வீதிகளில் செல்லும்போது ஒரு கையினால் இலாவகமாக தமது துவிச்சக்கரவண்டிகளைச் செலுத்திக்கொண்டு ஒரு கையினால் குடையினை பிடித்துக் கொண்டு செல்கின்றனர். இவ்வாறு எமது நாட்டில் (இந்தியாவில்) காண முடியாது.பெண்கள்மீதான வன் முறைக்கு காரணம் பெண்கள் மீதான தவறான மதிப்பின்மையேயாகும்.

ஒவ்வொரு பெண்ணும் தனது கணவர் உட்பட பிறரை சார்ந்திருக்காமல் இருப்பதற்கு பழகிக் கொள்ள வேண்டும்.

யாழ்.சமூகம் இனப்பற்றுள்ள, கலைப்பற்றுள்ள சமூகம் என்பது அனைவருக்கும் தெரியும். இதே போல் எதிர்கால சந்ததியினருக்கும் வழிகாட்டியாக இன்றைய இளைஞர்கள் திகழவேண்டும்.

இந்தியத் தூதரகம் யாழ்.நகரில் ஆரம்பித்து 3 வருடங்களாகியுள்ள நிலையில் பலவிதமான உதவிகளை செய்து வருகின்றோம்.

**வடமாகாண பெண்களுக்கு அடுத்த வருடம் தொழிற்பயிற்சிகளை வழங்கவுள்ளோம். இதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளாக குஜராத்திலிருந்து தொழில் வல்லுநர்கள் இங்கு அழைக்கப்பட்டு 5 மாவட்டங்களிலும் ஆய்வு செய்துள்ளனர்** எனத் தெரிவித்த அவர் ஊடகங்களிலும் தற்போது பெண்கள் பணியாற்ற ஆரம்பித்துள்ள நிலையில் பெண்களின் செறிவான வன்முறைகள் தொடர்பில் ஊடகங்களும் பொறுப்புடன் செய்திகளை வெளியிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## யாழ்ப்பாணத்தில் கரையொதுங்கிய தமிழக மீனவர்கள் நாடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

**கடல் சீற்றம் காரணமாக யாழ்ப்பாணத்தில் கரை ஒதுங்கிய தமிழகத்தின் நாகை மாவட்ட மீனவர்கள் இருவரும், கடலூர் மாவட்டத்தை சேர்ந்த ஒருவரும் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.** வேதாரண்யம் தாலுகா புஷ்பவனம் கிராமத்தை சேர்ந்தவர்கள் காளிதாஸ் (வயது38), காளியப்பன் (வயது 30), கடலூரை சேர்ந்தவர் ஜோதிமதி (வயது40) ஆகிய 3 பேரும் புஷ்பவனம் பகுதியை சேர்ந்த பாக்கியராஜ் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் கடந்த 26ஆம் திகதி கடலில் மீன்பிடிக்க சென்றனர்.

நவம்பர் 27ஆம் திகதியன்று கரை திரும்பவேண்டிய அவர்கள் கரைக்கு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த மீனவர்களின் குடும்பத்தினர் கிராம பஞ்சாயத்தார் மூலம் வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மற்றும் கடலோர காவற்படையினருக்கும் தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் மீனவர்கள் மற்றும் கடலோர காவற்படையினர் மாயமான மீனவர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் கடல் சீற்றம் காரணமாக திசைமாறி சென்ற மீனவர்கள் யாழ்ப்பாணம் அருகே உள்ள சுழிபுரம் கடற்கரையில் கரை சேர்ந்தனர், அவர்களை பொலிஸார் கைது செய்ததாகவும் தகவல் கிடைத்தது. பின்னர் மூவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டனர். இதுபற்றிய மீனவர்களின் உறவினர்கள் அவரகளை மீட்க கோரி மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் மூன்று மீனவர்களையும் விடுவிக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கையின் விளைவாக மூவரும் விடுவிக்கப்பட்டு நேற்றுக் காலை அவர்கள் நாடு திரும்பியுள்ளனர். (இ)

## வர்ண இரவு நிகழ்வு-2014

(யாழ்ப்பாணம்)

வர்ண இரவு 2014 நிகழ்வானது நாளை மறுதினம் 12 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில்சாவ கச்சேரியிலுள்ள பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது என வடமாகாண விளையாட்டுத்திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-5)




## ஆண்டு நிறைவு விழாவும் கலைக் கதம்ப விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 40 ஆவது நிறைவு விழாவும் மழலைகளின் கலைக் கதம்ப விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி.மணி மண்டபத்தில் மத்திய முன்பள்ளித்தலைவர் கா.சிவசோதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

**இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் ஜெயா தம்பையாவும் சிறப்பு விருந்தினர்களாக** யாழ்.வலயக்கல்வி அலுவலக முன்பள்ளிப் பணிப்பாளார் க.விமலநாதன், யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன், வலி.கிழக்கு கலாசார உத்தியோகத்தர் திருமதி றோகேசன் மிலாசினி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)





யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக புதிதாக பொறுப்பேற்றுள்ள வைத்திய அலங்கார நேற்றைய தினம் தனது பதவியினை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டபோது...

(படம்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மகிந்தவை ஆதரித்து யாழில் நேற்று வாகன ஊர்வலம்





(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை ஆதரித்து நேற்று காலை யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினால் மோட்டார் வாகன ஊர்வலம் நடத்தப்பட்டது.

இதன் போது யாழ். மாவட்ட சுதந்திர கட்சியின் அமைப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான இராமநாதன் அங்கஜன் கலந்து கொண்டார்.

இவ் வாகன ஊர்வலம் அக் கட்சி காரியாலயத்தில் இருந்து ஊர்வலமாக வைத்தியசாலை வீதி, வேம்படி சந்தி ,சத்திரச்சந்தி வழியாக சென்று பின்னர் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்தது.

பின்னர் அவ்விடத்தில் பட்டாசு கொளுத்தப்பட்டு தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அங்கு கருத்து தெரிவித்த அங்கஜன் மீண்டும் அரிய வாய்ப்பு ஒன்று வந்துள்ளது.இதுவரை நாங்கள் எதிர்ப்பு அரசியலை செய்து எங்கள் பிரதேசத்தை பின்தங்கி வைத்திருக்கின்றோம்.இனியும் அப்பிழைகளை விடாது அந்த அரியவாய்ப்பை எமது முன்னேற்றத்துக்காக பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-4)

# தேர்தலுக்காக விலைகளை குறைக்காது அரசாங்கம் வரியை குறைக்க வேண்டும்

## ஜே.வி.பி.கோரிக்கை

தேர்தலுக்காக பொருட்களின் விலைகளை குறைக்காது அரசாங்கம் வரியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜே.வி.பி.கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் எரிபொருளுக்கான விலைகளை குறைத்துள்ளதாக ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பெலவத்தையில் அமைந்துள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் பயனில்லை.

எரிபொருளுக்கான விலை களை குறைக்காது அறவீடு செய்யப்பட்டு வரும் பாரியளவிலான வரியை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் பாரியளவில் தேர்தல் விதி மீறலில் ஈடுபட்டு வருகின்றது.

சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதியின் உருவப்படம் பொறிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான பதாகைகள் நாடு முழுவதிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அமைச்சர்கள் சிலர் அரசாங்கத்தை விட்டு வெளியேறிச் சென்றமை, ஜனாதிபதிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கம் கடுமையான வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளது.

சகோதரரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியல் மேடைகளில் ஏறி பேசுகின்றார்.

தேர்தல் பிரசாரத்திற்காக அரசாங்கம் பாரியளவில் பணத்தை செலவிட்டு வருவதாக விஜித ஹேரத மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தனிப்பட்ட பிரச்சினைகளும் இல்லை

(கொழும்பு)

சிரச ரீ.வியில் ஒளிபரப்பாகும் சடண அரசியல் நிகழ்ச்சியை அரசாங்க தரப்பினர் புறக்கணிப்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொருளாளர் டலஸ அழகப்பெரும பதிலளித்தார்.

இல்லை, புறக்கணிக்கவில்லை, கலந்துகொள்ள வேண்டும் என்பதே அனைவரதும் நிலைப் பாடாகும். எதிர்காலத்தில் கலந்து கொளவர். நேற்றைய நிகழ்ச்சி தொடர்பில் எனக்கு உறுதியாக கூறமுடியாது. இரவு வேளையிலேயே நான் கொழும்பிற்கு வந்தேன். என்ன நடந்தது என்பது எனக்கு சரியாகத் தெரியாது. நிலைப்பாடுகள் மாறுபடலாம். எனினும் அலைவரிசையை அல்லது ஊடகத்தை புறக்கணிப்பதற்கு அதுவொரு காரணம் அல்ல என அவர் பதிலளித்தார். (இ-5)

## வெளிநாட்டில் தொழில்புரியும்

# பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்த பின்னர் தொழில் வாய்ப்புக் கருதி வெளிநாடு சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்குவதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாடு மற்றும் நலனோம்பல் அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை**

அரசபாடசாலையொன்றில்கல்வி கற்று இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவரின் பெற்றோரில் தாய் அல்லது தந்தை 2009.08.21 இற்கும் 2014.08.21 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**க.பொ.த (சா/து) பரீட்சை**

2013ஆம் ஆண்டு க.பொ.த சா/த பரீட்சையில் ஒருதடவையில் சித்தியடைந்து உயர்தரம் படிப்பதற்கான தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

தாய் அல்லது தந்தை 2008.12.01 இற்கும் 2013.12.01 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**உயர்கல்வி புலமைப்பரிசில்**

2013ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து தற்போது அரச பல்கலைக்கழகத்தில் முழுநேர உள்வாரி பட்டப்படிப்பில் முதல் ஒரு வருடத்தில் கற்பவராக இருத்தல் வேண்டும்.

தாய் அல்லது தந்தை 2008.08.01 இற்கும் 2013.08.01 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பணியகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர் ஆவணங்களை பதிவுத் தபாலில் எதிர்வரும் 2015.03.31 ஆம் திகதிக்கு முன்னர் முகாமையாளர் (நலன்புரி) இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், இல.234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

அனுப்பவேண்டிய ஆவணங்கள் தொடர்பான மேலதிக விபரங்களையும் மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் 2014.12.07ஆம் திகதிய தினகரன் பத்திரிகையிலோ வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிட முடியும்.

# அலெக்ஸ் பரந்தாமனின் அழுகைகள் நிரந்தரமில்லை



இருள் என்ற ஒன்று இருந்தால் பகல் வந்தாக வேண்டுமே என்பது உலக வழமை. புதுக்குடியிருப்பு அலெக்ஸ் பரந்தாமனின் ''**அழுகைகள் நிரந்தரமில்லை**'' சிறுகதைத் தொகுதி இருள் ஒன்று உண்டெனில் பகல் வரும் எனும் மையப் பொருளைக் கொண்டதே! கொண்டுவருவது வழமை. முதல் பத்துக்குள்தங்கள்நிறுவனமோ,பொருட்களோ அல்லது படைப்புக்களோ வந்தால்அதுஅவர்களுக்குபெருமை.

தன்னிடம் உள்ள எண்ணற்ற கதைகளில் முதற்தரமான பத்தை தெரிவு செய்து வெளியீடு செய்ய முற்பட்டதென்பது வெளியீட்டின்

## ஒரு விமர்சன பார்வை

மரணங்கள் மலிந்த அந்த போர்க்கால அனுபவங்களை மனதில் தைக்கும் வண்ணம் பத்துக் கதைகளினூடாக வெளிக் கொணர்ந்திருக்கின்றார் அலெக்ஸ் பரந்தாமன்.




உலகில் முன்னணியாக இருக்கும் எதையும் முதல் பத்துக்குள் தரத்தை சுட்டி நிற்கிறது.

எழுத்தாளர் ஒவ்வொரு கதையினூடேயும் ஆழமான கருத்தியலை ஊடுறுத்தி வாசிக்கும் ஒவ்வொருவரின் மனங்களையும் தொட்டுச் செல்வார் என்பதில் ஐயமில்லை.

"அணலெணவாகிய நினைவுகள்" எனும் கதையில் ''**உபத்திரவங்களில் இருந்து விடுபட நினைத்தவர் நெருப்பில் உபத்திரப்பட்டே போய்ச் சேர்ந்திட்டாரே?**'' எனும் வரிகள் ஆழமானவை.

போர் தந்த வடுக்கள் எம் நெஞ்சங்களில் நெரிஞ்சி முள்ளாய்த் தைத்துக் கொண்டிருப்பதை "**சூனியங்கள்**" எனும் கதையில் ''**போராட்டத்தின் இலக்கானது தடம்மாறிய பிற்பாடும் அதன் தலைமைத்துவம் சிதைந்த பின்பும் குப்பி கடித்து இறப்பது, வீணான கொள்கை**'' என ஒரு பாத்திரம் பேசும் போது அதன் அதிர்வுகள் மனங்களை நிலைகுலைய வைக்கின்றன.

படைப்பில் அத்தனை கதைகளும் சமூகப் பார்வையினூடே மிக அழுத்தமாக கூறியிருக்கிறார் எழுத்தாளர் அலெக்ஸ் பரந்தாமன்.

இவரின் இந்தப் படைப்பு நிச்சயம் வெற்றி பெறும். "**அழுகைகள் நிரந்தரமில்லை**'' படைப்புக்கள் போல் மேலும் பல படைப்புக்கள் தமிழர் தம் வாழ்வின் சுவடு களை பதிவு செய்ய முன்வர வேண்டும்.

நாம் வாழ்வில் பட்ட துன்ப துயரங்கள் எதையும் எம் அடுத்த சந்ததிக்கு கையளிக்காமல் அந்த நனவுகளை எழுத்துருவாய் அவர் களிடத்தே பின்னிப்பிணைய இவ்வாறான படைப்புக்கள் காலத்தின் தேவையாகும்.

**மாவை. நா.கஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம் செயற்பாடுகளை வீடியோ எடுக்க சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலகங்களுக்கும் அமைச்சின் செயற்பாடுகளை வீடியோ படமாக எடுத்து அனுப்புவதற்கு தலா 5 ஆயிரம் ரூபாவை அனுப்பி வைத்துள்ளது.

அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்பை பெற்று இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளார்..

இந்த நிதி மூலமாக சமூக அமைச்சினால் வழங்கப்பட்ட சுயதொழில் உதவித் திட்டங்கள் மூலமாக வெற்றிகரமான நிலையை அடைந்த நபர்களின் செயற்பாடுகள் படமாகப் பிடிக்கப்பட்டு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சமூக சேவைகள் அமைச்சு அங்கவீன முற்றோர் தேசிய செயலகத்தினூடாக சுய தொழில் கொடுப்பனவுகளை 15 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ஆயிரம் ரூபா வரை வழங்கி வருகின்றது.

இதன் மூலமாக கால்நடை வளர்ப்பு சிறு கைத்தொழில், விவசாயம்,சிறுகடை போன்ற கைத்தொழில் முயற்சிகள் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவு இவ் வருடம் 18 மாற்றுத்திறனாளிகளுக்கு சுய தொழில் கொடுப்பனவுகளை மேற்கொண்டு இருந்தது.

அதே போல வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மூலமாக 12 மாற்றுத்திறனாளிகள் 15 ஆயிரம் ரூபா சுயதொழில் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளனர். (அ-2-254)




# ஆசிரியர் ஆளணி வளத்தை இழந்து வருகிறது கிளிநொச்சி மாவட்டம்

## சந்திரகுமார் எம்.பி.சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் படிப்படியாக ஆசிரியர் ஆளணியை இழந்து வருகின்றது. இதனால் ஆசிரியர் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவர்கள் ஏமாற்றமடைகின்றனர்.

ஆசிரியர் வளப்பங்கீட்டில் நிலவும் புறக்கணிப்பு போக்கில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. இந்நிலை தொடருமானால் எதிர்காலத்தில் கல்வியில் விரக்தியுற்ற மாணவ சமூகம் ஒன்றே உருவாக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

முழங்காவில் மத்தியகல்லூரியில் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்திற்கான குளிரூட்டித் தொகுதிகளை அண்மையில் வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையானது ஆசிரியர் ஆளணியை படிப்படியாக இழந்து வருகின்றது. அதன் பாதிப்புக்களை கிராமப்புற மாணவர்களே அதிகமாக எதிர் கொள்கின்றனர்.

வட மாகாணத்தின் ஆசிரியர் ஆளணியில் பெரும்பகுதியை வழங்கும் மாவட்டமாக யாழ்.மாவட்டமே விளங்குகின்றது.

இந்நிலையில் அங்கிருந்து வருகைதரும் ஆசிரியர்களை எதிர்பார்த்து இப்பகுதி மாணவர்கள் காத்திருக்கின்றனர்.

ஆனால் வடக்கு மாகாண கல்வி அமைச்சு இப்பகுதிகளுக்கான ஆசிரியர் வளத்தை சரியாக பங்கீடு செய்யாததன் விளைவாக மாணவர்கள் ஏமாற்றமடைகின்றனர். இந்நிலை தொடருமானால் கல்வியில் விரக்தியுற்ற ஒரு சமூகமாக எமது மாணவர் சமூகம் மாற்றம் பெறுவது தவிர்க்க முடியாத தொன்றாகி விடும்.

எனவே கிராம, நகர வேறுபாடின்றி அனைத்து மாணவர்களுக்கும் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமை. அந்த கடமையைச்சரிவரச் செயற்படுத்த முடியாதவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதற்கு தகுதியற்றவர்களாகவே கணிக்கப்படுவர்.

நாம் படிப்படியாக எமது பிரதேசங்களின் கல்வி மற்றும் ஏனைய கட்டுமானங்களை மேம்படுத்தி வருகின்றோம்.

அதன் ஒரு அங்கமாக இன்று கிளிநொச்சி



அறிவியல் நகரில் சுமார் 100கோடி ரூபா பெறுமதியான தொழில்நுட்ப பயிற்சி நிலையமொன்றை அமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளோம்.

ஒரே தடவையில் அறுநூறு மாணவர்களை உள்வாங்கக்கூடிய வகையில் அப் பயிற்சி நிலையம் நிறுவப்படுகின்றது.

எனவே எதிர்காலத்தில எமது இளம் தலைமுறையினர் கல்விதரா தகைமைகளோடு மட்டும் நின்று விடாது தொழில் வாய்ப்புக்களைப் பெறக்கூடிய வகையில் மேலதிக தொழற்தகைமைகளையும பெற்றுக்கொள்ளக கூடிய வாய்ப்பு எமது பிரதேசத்திலேயே உருவாகியிருக்கின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

## இலவச மருத்துவ முகாம்



முத்தையன் கட்டு இடதுகரை பிரதேச மக்களுக்கு அண்மையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

யாழ்ப்பாண மருத்துவ சங்க வைத்திய அதிகாரிகளின் ஆதரவுடன் வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனின் ஒருங்கமைப்பில் இவ் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது.

இதில் 100 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் பயன்பெற்றனர்.

மேற்படி பிரதேச மக்கள் மருத்துவ சேவையை பெறுவதற்காக பல சிரமங்களை முகம்கொடுக்கின்ற நிலை காணப்படுமிடத்து இவ்வாறான இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது.

இப்பிரதேச மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்ததாக பயன்பெற்ற பொது மக்கள் தெரிவித்தனர். (அ-2)

## ஸ்ரீ சாரதா தேவியின் 162 ஆவது ஜெயந்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் சுவாமி விவேகானந்த நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 162 ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி சுவாமி விவேகானந்த நலன்புரி நிலையத்தில் நடைபெறும்.

இதன்போது நடனம், கவிதை, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை, பொன் மொழிகள், கதை, பேச்சு என்பன இடம்பெறும். (அ-2)



துனுக்காய் பிரதேச செயலகத்தில் சிறப்பாற்றல் உள்ளோரை கௌரவித்து மகிழ்விப்போம் எனும் தொனிப்பொருளில் சிறப்பாற்றல் உள்ளோர் தினம் அண்மையில் மங்கள ஒளியேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமானதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பனிக்கன்குளம், சிவநகர் செய்தியாளர்கள்)

# தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வட்டக்கச்சி பொதுநூலகத்தினால் இவ்வாண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**பேச்சுப் போட்டி (தரம்-2,3)**

ச.பாமகள் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.), கி.விதுசி (கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்), பி.மைவிழி (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.)

**பேச்சுப் போட்டி (தரம்-4,5)**

கு.மதுசாயினி (கிளி/இராமநாதபுரம் ம.வி.), பூ.சிந்துஜா (கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்), வி.மகிழினி (கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.)

**வாசிப்புப் போட்டி**

பி.யதுர்சன் (கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க.), பா.யுகான், சி.கனிஸ்ணா (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.).

**நடனம்**

தீ.சரணிகா (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.), கி.விதுசி, பூ.ஜினுஷா (கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்)

**சுவரொட்டிப் போட்டி (மாணவர்களுக்கானது)**

ச.யசிந்தா (கிளி/இராமநாதபுரம் ம.வி.), உ.புவனிகா, ஜெ.டன்சிகா (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.)

**சுவரொட்டிப்போட்டி(திறந்த போட்டி)**

யோ.எபநேசன், சு.சுயந்தன், நிக்சன் அன்ரன்

**பொது அறிவுப்போட்டி (தரம்-6,7,8)**

பா.கஜன், ச.சிந்துஜன் (கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.), ஜெ.தணனி (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.)

**பொது அறிவுப் போட்டி(தரம்-9,10,11)**

மோ.தமிழ்மாறன் (கிளி/முருகானந்தா கல்லூரி), சு.சங்கீர்த்தனா (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.), ச.சிவசக்தி (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி)

**சிறுகதைப் போட்டி**

திருமதி வி.ஜீவரஞ்சினி, சி.அமுதினி, சி.விதுசா

**கட்டுரைப் போட்டி (தரம்-6,7,8)**

இ.தமிழினி (கிளி/வட்டக்கச்சி ம.கல்லூரி), சி.கிருசாந்தினி, ஜெ.தணனி (கிளி/இராமநாதபுரம் மேற்கு)

**கட்டுரைப்போட்டி (தரம்-9,10,11)**

ச.சிவசக்தி (கிளி/வட்டக்கச்சி ம.கல்லூரி), நி.தனுஷா (கிளி/இராமநாதபுரம் மேற்கு), (இருவர் மூன்றாமிடம்) கு.லதுசிகா, சி.தனுசியா (கிளி/வட்டக்கச்சி ம.கல்லூரி). (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஹகுபிட்" புயல் ருத்ரதாண்டவம்

பிலிப்பைன்ஸ் நாட்டை மிரட்டி வந்த ஹகுபிட் புயல் நேற்று முன்தினம் அங்கு கடு மையாக தாக்கியது. அப்போது மணிக்கு 160 கி.மீ. முதல் 195 கி.மீ. வரை சூறாவளி காற்று வீசியது. ஆயிரக்கணக்கான மர ங்களும் மின்கம்பங்களும் வேரோடு சாய் ந்தன. தகவல் தொடர்பு சாதனங்கள் செயலி ழந்தன. இந்தப்புயல் காரணமாக தாழ் வான கிராமங்களில் வசிக்கிறவர்கள், நிலச்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசி த்து வருகிறவர்கள் என 12 இலட்சம் பேர் தங்கள் இருப்பிடங்களில் இருந்து வெளி யேற்றப்பட்டு ஆயிரத்து 500 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.




அளவுக்கு அதிகமாக மக்கள் கூட்டம், கூட்டமாக தங்க வைக்கப்பட்டுள்ளதால் அங்கு சுகாதாரப் பிரச்சினைகள் எழுந்துள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இயற்கை பேரிடரால் ஒரே நேரத்தில் இப்படி 12 இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டிருப்பது, உலகளவில் இதுவே முதற்தடவையாக கருதப்படுகிறது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் வீதிகள் வெள்ளக்காடுகளாக காட்சி அளிக்கின்றன. சாமர் தீவு, லேட்டே மாகாணம், தாக்லபான் நகர் ஆகியவை பெரும பாதிப்புக்கு ஆளாகியுள்ளன.

இந்தப் புயலில் கிழக்கு சாமர் தீவில் 2 பேர் பலியாகினர். பலர் காணாமற் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## நைஜீரியாவில் மத்திய சிறையை உடைத்து 200 கைதிகளை விடுவித்த தீவிரவாதிகள்

மத்திய நைஜீரியாவில் மின்னா நகரில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இங்கு போகோஹறாம் தீவிரவாதிகள் உள்ளிட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் திடீரென புகுந்தனர். அங்கிருந்த பொலிஸார் மற்றும் அதிகாரிகள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.

பின்னர் உள்ளே புகுந்து சிறையில் அடைக்கப்பட்ட 200 கைதிகளை விடுதலை செய்தனர். இந்த தகவலை பொலிஸ் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

ஆனால் இத் தாக்குதலில் பலியானவர்கள் குறித்து எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. இதற்கிடையே, இத் தாக்குதலில் போகோஹறாம் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகளுடன் தொடர்புடைய அன்சாரு என்ற தீவிரவாத அமைப்பினர் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

ஏனெனில் அவர்கள் தான் இதுபோன்று பல தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## உலகின் முதல் கிரீன் டீசல் விமானம் பறந்து சாதனை

விலங்குகளின் கொழுப்பு, வீணாக போகும் சமையல் எண்ணெய் கழிவுகள் மற்றும் தாவர எண்ணெயிலிருந்து 'கிரீன் டீசல்' தயாரிக்கப்படுகிறது. ஏ.டி.எப்.ஐ காட்டிலும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக கருதப்படும் இந்த எரிபொருள் கடந்த 2011 இற்கு பிறகு தரைவழி போக்குவரத்து வாகனங்களில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

ஆசியா, ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் 800 மில்லியன் கலன்கள் அளவுக்கு கிரீன் டீசல் உற்பத்தி உள்ளது. இது மிக குறைவே என்றாலும் பயன்பாடு அதிகரித்தால் உற்பத்தியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் போயிங் விமான நிறுவனம் வழக்கமாக பயன்படுத்தப்படும் ஜெட் பியூயல் பெற்றோலியத்துடன் கிரீன் டீசலையும் கலந்து கடந்த 2 ஆம் திகதி போயிங் 787 விமானத்தில் சோதனை செய்தது. அதில், ஜெட்பியூயலை போலவே கிரீன் டீசலும் நன்றாகவே வேலை செய்தது. (இ-5)

உலக தரிசனம்

## ரஷ்யா - பிரான்ஸ் தலைவர்கள் சந்திப்பு

கிழக்கு உக்ரைனில் அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போதும், அதையும் மீறி இருதரப்பும் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர். எனினும் அங்கு புதிதாக பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் அழைப்பு விடுத்துள்ளது.

எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அங்கு நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன ஒரு பகுதியாக பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹாலண்டே ரஷ்யா சென்றுள்ளார்.

மொஸ்கோவில் ஜனாதிபதி புடினுடன் பேச்சுவார்த்தை நடத்திய அவர், இந்த விவகாரத்துக்கு கண்டிப்பாக நாம் ஒரு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினார். முன்னதாக அவர் உக்ரைன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

புடினுடனான சந்திப்பு குறித்து கூறியுள்ள ஹாலண்டே, 'உக்ரைன் விவகாரத்தில் சிறந்த தீர்வு காண சரியான நேரமிது. இந்த பேச்சுவார்த்தை மூலம் சிறிது பயன் ஏற்படும். இந்த நேரத்தில் வெளியில் இருந்து யாரும் நம்மை பிரிக்காதவாறு கவனமாக இருக்க வேண்டும்' என்று தெரிவித்தார்.

உக்ரைன் விவகாரத்தில் சிக்கலான பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கு தீர்வு காண இந்த சந்திப்பு சிறந்த பங்களிப்பை ஏற்படுத்தும் என புடினும் கருத்து தெரிவித்துள்ளார். (இ-5)


## மலையிலிருந்து உருண்டு விபத்தில் சிக்கியது பேருந்து 17 பேர் பலி!

நேபாள தலைநகர் காட்மண்டுவில் இருந்து 400 கிலோ மீற்றர் தொலைவில் மலைமீது சென்று கொண்டு இருந்த பேருந்தில் 67 பேர் பயணம் செய்தனர். பேருந்தில் அதிகமான பயணிகள் இருந்ததால் ஒரு திருப்பத்தில் திரும்பும் போது பேருந்து 2 ஆயிரம் அடி உயர மலையில் இருந்து உருண்டது.

பேருந்தில் இருந்த 17 பேர் பலியானர்கள். படுகாயம அடைந்தவர்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

கடந்த மாதம் நடந்த பேருந்து விபத்தில் 47 பேர் பலியானாரகள். அதுபோல் ஒக்டோபர் மாதம் நடந்த ஒரு பேருந்து விபத்தில் 14 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மாமிச மலை மரணம்



இங்கிலாந்தை சேர்ந்தவர் கெய்த் மார்ட்டின். இவரது உடல் எடை 444 கிலோ. எனவே உலகின் மிக குண்டான மனிதர் என அழைக்கப்பட்டார். அதிக உடல் எடை இருந்ததால் அவரால நடக்க முடியவில்லை. எனவே படுத்த படுக்கையாக இருந்த அவர் மிகவும் அவதிப்பட்டார்.

எனவே அவரது உடல் எடையை குறைக்க கடந்த 8 மாதங்களுக்கு முன்பு வயிற்றில் அறுவை சிசிக்சை (ஆபரேசன்) செய்து கொண்டார்.

அதை தொடர்ந்து நிமோனியாவால் பாதிக்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

அறுவை சிகிச்சைக்கு பிறகு அவர் உயிருடன் இருந்திருந்தால் மேலும் எடை குறைந்து இருக்கும். அதன் பின்னர் அவர் சாதாரண மனிதர்களை போன்று நடமாடியிருக்க முடியும்.

துரதிர்ஷ்டவசமாக அவர் நிமோனியாவால் பாதித்து உயிரிழந்து விட்டார் என அவருக்கு அறுவை சிகிச்சை செய்த வைத்தியர் கேசவா மணர் தெரிவித்துள்ளார். (இ-5)

## நியூசிலாந்தைச் சேர்ந்த 82 பேர் எபோலா தடுப்பு குழுவில் இணைவு

(வெலிங்டன்)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா நோய் தாக்கி இதுவரை 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர். இந்த உயிர்க்கொல்லி நோயை கட்டுப்படுத்த முடியாமல் உலக நாடுகள் தவித்து வருகின்றன.

மேலும், மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு உதவ உலக நாடுகள் தாதியர்கள, மருந்தாளர்களை அனுப்பி வைக்கிறது.

நியூசிலாந்து அரசும் தற்போது இதுபோன்ற 82 பேரை மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அனுப்பி வைத்துள்ளது.

இவர்கள் அவுஸ்திரேலிய தொண்டு நிறுவன ஆர்வலர்களுடன் சேர்ந்து சியாரா லியோனில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்வார்கள் என்று நியூசிலாந்து சுகாதாரத்துறை அமைச்சர் ஜோனாதல் கொலேமன் தெரிவித்தார்.

ஏற்கனவே, சர்வதேச அளவில் எபோலாவை எதிர்த்து போராடுவதற்காக 2 மில்லியன் டொலர் நிதியுதவி செய்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## படகு கவிழ்ந்து 70பேர் மரணம்

ஏமன் மேற்கு கடற்பகுதியில் ஆபிரிக்க அகதி களை ஏற்றிவந்த படகு ஒன்று கவிழ்ந்து நேற்று முன்தினம் நள்ளிரவு விபத்துக்குள் சிக்கியதில் 70 பேர் பலியாகினர் என்று அந்நாட்டு பாதுகாப்பு படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகளில் பெரும்பாலானோர் ஆபிரிக்காவின் எதியோப்பியாவை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. செங்கடல் பகுதியில் பலத்த காற்று வீசியதையடுத்து அகதிகள் வந்த படகு கடலில் கவிழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆபிரிக்க கொம்பு- ஏமன் இடையே கடற்பகுதியில் ஒவ்வொரு வருடமும் சுமார் 10 ஆயிரம் அகதிகள் சட்ட விரோதமாக பயணம் செய்கின்றனர் என்று அகதிகள் அமைப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.சபையின் தகவலின் படி 2014ஆம் ஆண்டில் இதுவரையில் சுமார் 200 இற்கும் மேற்பட்டோர் இக்கடற்பரப்பில் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டை இறப்பைவிட அதிகம் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பட்டாம்பூச்சிகள் எங்கே?



சாதனா, அவசரமாக புத்தகங்களைத் தன் பையில் வைத்துக்கொண்டிருந்தாள்.

6 ஆம் வகுப்பு படிக்கும் சாதனாவுக்கு, புத்தகங்களுக்கு அட்டை போடுவது பிடிக்காது.

அட்டை போடாமலே பத்திரமாக வைத்திருப்பாள்.

ஒவ்வொரு புத்தகமாக பைக்குள் வைத்தவளுக்கு, தமிழ், ஆங்கிலப் புத்தகத்தைப் பார்த்தபோது ஆச்சர்யம்.

அந்தப் புத்தகத்தின் அட்டையில் இருக்க வேண்டிய இரண்டு பட்டாம்பூச்சிகளையும் காணவில்லை.

அவை, சாதனாவுக்கு ஃப்ரெண்ட்ஸ்.

ஒன்று, பெரிதாக பழுப்பு மற்றும் கறுப்பு நிறத்தில் இருக்கும்.

சின்னப் பட்டாம்பூச்சி, இளமஞ்சள் மற்றும் கறுப்பு நிறத்தில் இருக்கும்.

பள்ளியிலிருந்து வீட்டுக்கு நடந்துதான் செல்வாள். அப்படி செல்லும்போது, அந்தப் பட்டாம் பூச்சிகளோடு பேசிக்கொண்டே வருவாள்.

சில சமயம், அவை பறந்துவந்து தோளில் அமர்ந்துகொள்ளும்.

இன்று எங்கே போனதோ தெரியவில்லை... பட்டாம்பூச்சிகள் இல்லாத புத்தகத்தைப் பையில் வைத்துக்கொண்டு, பள்ளிக்குப்புறப்பட்டுவிட்டாள்.

சாதனாவுக்கு ரொம்பவும் கவலையாகி விட்டது. அந்தப் பட்டாம்பூச்சிகளிடம் சொல்வதற்கு ஒரு கதை தயார் செய்திருந்தாள்.

டீச்சர் பார்த்துக் கேட்டால், என்ன செய்வது என்ற பயமும் ஒரு பக்கம் வந்தது.

பெருமாள் கோயில் திரும்பியதும் மீண்டும் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள்.

அவை வரவில்லை. பாலத்தைக் கடந்துதான் பள்ளிக்குச் செல்ல வேண்டும். பாலத்திலிருந்து இறங்கியதும் தும்பைச் செடியில் பட்டாம்பூச்சிகள் இரண்டும் அமர்ந்திருந்தன.

இவளைப் பார்த்ததும் பறந்துவந்து தோளில் அமர்ந்துகொண்டன.

சாதனாவுக்கு கோபம் கோபமாக வந்தது.

"ஏய்... ரெண்டு பேரும் எங்கே போனீங்க. உங்கள எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா?" என்றாள்.

அதற்கு அவை, "உன் புத்தகத்தில், நாங்க இருக்குமடத்தில் பூக்களே இல்லை. அதனால்தான் பூக்கள் இருக்கும் இடமா போனோம" என்று சொல்லிவிட்டு, புத்தக அட்டையில் உட்கார்ந்துகொண்டன.

அவை சொல்வது சரிதான். பூக்கள் இல்லாமல் பட்டாம்பூச்சி எப்படி இருக்க முடியும்? என்று நினைத்தாள் சாதனா.

தன் வகுப்புக்குச் சென்றதும், கலர் பென்சில் எடுத்து, பட்டாம்பூச்சிகளுக்கு அருகே அழகான பூ ஒன்றை வரைந்தாள்.

# நீ யார்?

பிரவீன ரொம்பச் சுட்டியான பையன். படிப்பிலும் கெட்டி. ஆனால், அவன் விடயத்தில் எல்லாமே ஏடாகூடமாக நடந்துவிடுகிறது.



வகுப்பில், கரும்பலகையிலிருக்கும் கணக்கை அவசரமாக எழுதும்போதுதான் பென்சில் கூர் உடைந்து போகிறது.

பேனாவில் இங் தீர்ந்து போகிறது. எனக்கு மட்டும் ஏன்தான் இப்படி நடக்குதோ? என்று அப்பாவிடம் புலம்பினான் பிரவீன.

அப்பா, அவன்தலையைத் தடவி சிரித்தார். பிரவ்ன, இந்தப் பிரச்சினை எல்லோருக்குமே உண்டு. செய்யற வேலையைச் சரியா செஞ்சுட்டே போனா, எல்லாம் சரியாயிடும் என்றார்.

ஆனாலும், பிரவீன சமாதானமாகவில்லை என்பதைப் புரிந்துகொண்ட அப்பா, அவனை கிச்சினுக்கு அழைத்துப்போனார்.

காஸ்ஸ்டவ்வைப்பற்ற வைத்து, அதன்மூன்று பீடங்களிலும் மூன்று கிண்ணங்களை வைத்து, பாதியளவு நீர் ஊற்றினார். அப்பா செய்வதைப் புரியாமல் வேடிக்கை பார்த்தான் பிரவீன.

நீர் சற்றுக் கொதி வந்ததும், ஒரு பாத் திரத்தில் ஒரு கோழிமுட்டையைப் போட்ட அப்பா, இன்னொன்றில் ஓர் உருளைக் கிழங்கைப் போட்டார். மூன்றாவதில் கொஞ்சம் டீத்தூளைப் போட்டார்.

அவற்றைக் கொதிக்க விட்டார். பின்னர், கோழிமுட்டையை எடுத்து அவனிடம் கொடுத்து, ஆட்டிப் பார்க்கச் சொன்னார். அது, கல் போன்று இருந்தது. உருளைக்கிழங்கு, மிருதுவாக இருந்தது.

டீத்தூள், டிகாக்ஷனாக மாறியிருந்தது.

புரிகிறதா... கொதிக்கும் நீர் என்பதுதான் பிரச்சினை.

ஆனால், ஓட்டுக்குள் திரவமாக இருந்த முட்டை, கொதிக்கும் நீரில் கடினமாகிவிட்டது.

உறுதியாக இருந்த உருளைக்கிழங்கு நன்கு வெந்து, மென்மையாகிவிட்டது.

டீத்தூள், கொதிக்கும் நீரையே மணமுள்ளதாக மாற்றிவிட்டது.

இந்த மூன்றில் நீ யார்? பிரச்சினையைக் கண்டு இறுகிப்போகிற முட்டையா? குழைந்து மென்மையாகும் உருளையா? பிரச்சினையையே பயனுள்ளதாகச் செய்கிற டீத் தூளா? நீயே முடிவு செய்துகொள்! என்றார் அப்பா.

பிரவீன மனம் தெளிந்தது.




- ✦ 1582 (ஜுலியன், ஞாயிற்றுக்கிழமை) - பிரான்ஸ் அடுத்த நாளை திங்கட்கிழமை, டிசம்பர் 20 (கிரெகோரி யன்) ஆக்கியது.
- ✦ 1793 - நியூயோர்க் நகரின் முதலாவது நாளிதழ் "தி அமெரிக்கன் மினேர்வா" வெளியிடப்பட்டது.
- ✦ 1856 - ஈரானிய நகரம் புஷேஹர் பிரித்தானிய ஆக்கிர மிப்புப் படைகளிடம் வீழ்ந்தது.
- ✦ 1905 - பிரான்சில் அரசையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் பிரிக்கும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.
- ✦ 1917 - பிரித்தானியர் பாலஸ்தீனத்தின் ஜெருசலேம் நக ரைக் கைப்பற்றினர்.
- ✦ 1922 - போலந்தின் முதலாவது அதிபராக "கப்ரியேல் நருட்டோவிச்" தெரிவு செய்யப்பட்டார்.
- ✦ 1946 - இந்திய சட்டசபை ராஜேந்திர பிரசாத் தலைமை யில் அமைக்கப்பட்டது.
- ✦ 1953 - ஜெனரல் எலெக்ட்றிக் நிறுவனம் தனது நிறுவனத்தில் பணியாற்றிய கம்யூனிஸ்ட்கள் அனைவரையும் பணிநீக்கம் செய்தது.
- ✦ 1979 - பெரியம்மை நோய் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. மனித உயிர் கொல்லி நோய் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது இதுவே முதலாவதாகும்.
- ✦ 1990 - லெக் வலேசா போலந்தின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அதிபரானார்.
- ✦ 1992 - வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ், இளவரசி டயானா இரு வரினதும் பிரிவினை அறிவிக்கப் பட்டது.

### பிறப்புகள்

- ✦ 1946 - சோனியா காந்தி, இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர்

### இறப்புகள்

- ✦ 2006 - சு. வில்வரத்தினம் ஈழத்துக் கவிஞர (பி. 1950)

கிலியானோ ஸ்ட்ரோ, ருமேனியா நாட்டைச்சேர்ந்த உலகின் இயம் வயதஜ சிக்ஸ்பேக் சிங்கம்.

பத்து வயது ஆகும் கிலியானோ உலகின் குட்டி பாடி பில்டர். அப்பா லூலியன் சொந்தமாக ஜிம் வைத்திருந்ததாலேயே, இப்படி ஒரு இளம் சிங்கம் எளிதில் உருவானது. மகனின் ஆர்வத்தை இரண்டு வயதிலேயே கண்ட லூலியன் இத்தாலிக்கு இடம்பெயர்ந்து உலகின் இளம் வயது பாடி பில்டராய் தன் மகனை ஆக்கிக் காட்ட முயற்சிகள் மேற்கொண்டார்.




அதற்கு தசை மேல் பலன் கிடைத்தது. 2009 இல் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் 33 அடிகள் தலைகீழாக நடந்து (கால்களில் சுமையோடு) இடம்பிடித்தான். இதனாலேயே இத்தாலி சனல்களில் ஏகபோக ஹாட் சாய்ஸ் ஆகிவிட்டான். எல்லா சனல்களும் டி.ஆர்.பி.யை ஏற்றுக்கொள்ள கிலியானோவை வைத்து விதவிதமான ஸ்டன்ஸ் நிகழ்ச்சிகளை நடத்திக காசு பார்த்தன. ஒரு கட்டத்தில் இத்தாலியர்களின் டாச்சர் பொறுக்காமல் தந்தை லூலியன், தாய் நாடான ருமேனியாவுக்கே குடும்பத்தோடு திரும்பிவிட்டார்.

அதன் பிறகு 2010 இல் 90 டிகிரி கோணத்தில் கால்கள் தரையில் படாமல் 20 தண்டால்களை எடுத்து ருமேனியாவின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்தான்.

இப்போது பெரிய மனிதர்கள் சிக்ஸ்பேக் வைத்துவிட்டு செய்யும் ஹியூமன் ஃப்ளாக் புல்-அபஸ், மஸில் புல்-அப்ஸ் என நான்கைந்து வெரைட்டிகளில் தண்டால் எடுத்து மிரட்டுகிறான். கிலியானோவின் யூடியூப் வீடியோக்களைப் பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கிறது. பாட்டில்களை வரிசையாக அடுக்கி அதில் கைகளை ஊன்றி தண்டால் எடுப்பது, ஒற்றைக் கையில் தண்டால் எடுப்பது என்று ஏதேதோ செய்கிறான்.

அர்னால்டு போல ஆக்ஷன் ஹீரோவாய் ஆக வேண்டும் என மீடியாக்களில் பேட்டி தட்டும் கிலியானோவுக்கு போட்டி இப்போது குடும்பத்திலிருந்தே ஆரம்பமாகிவிட்டது.

தம்பி கிளாடியோவுக்கு 8 வயது ஆகிறது. பத்து தண்டால்கள் வரை கால்கள் தரையில் படாமல் எடுக்க ஆரம்பித்துவிட்டான் கிளாடி.

சபாஷ் சரியான போட்டி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 15

....உடுக்குல பசையத் தடவி சந்திரவளையத்தையும் சூரிய வளையத்தையும் சவ்வெடுத்து மூட்டி, ரெண்டு வளையத்தையும் நூல் கயித்துல எணைச்சு எணைச் கச்சை கட்டி, ஒருபக்க உடுக்கையில குதிரைவால் ரோமங்களக் கம்பி மாதிரி இழுத்து வெறப்பாக் கண்ணிகட்டி, சுங்கம் வச்ச கடிவாளமும் சேத்து, செத்தவடம் காய வச்சு அடிச்சாரய்யா பெரிய கோடாங்கி.

சும்மா நரம்பச் சுண்டுது நாதம்; காது வழியாகக் கள்ளுக் குடிச்ச மாதிரி இருக்கு.

உடுக்கு- சாமி அப்பன் மூணும் ஒண்ணுதான் இருளப்பக் கோடாங்கிக்கு.

தலை நெறைய உருமாக்கட்டி, நெத்தி தேயப்பட்டையடிச்சு, கொழகொழன்னு சந்தனம் பூசி, அதுல ஒரு குழியும் வெட்டிக் குங்குமம் அப்பி, உருத்திராட்சமால நெஞ்சுல பொரள, -காவி வேட்டியும் அதுக்கு மேல சரிகைத் துண்டும் கட்டி "எங்க பொண்டு புள்ளைகளுக்கு நல்ல சொகம் குடு சாமி"ன்னு உடுக்கையத் தொட்டுக் கும்பிட்டெடுத்து "வாரான் இருளப்பன் வழி விடுங்கப்பா"ன்னு நடந்து வாராரு கோடாங்கி.

"கருவாச்சிக்குப் பேய் ஓட்டப் போறாகளாம்; கருவாச்சிக்குப் பேய் ஓட்டப் போறாகளாம்". கோடாங்கி பின்னாலேயே ஒரு அறுப்பாளு வருது (அறுவடைக்குச் செல்லும் பெருந்திரள்)

இந்தக் கல்யாண வீடு, எழவு வீடு, காதுகுத்து வீடு, சடங்கு வீடு இங்கயெல்லாம் கண்காட்சியோட சின்னதா ஒரு பொழுது போக்கு இருக்கு சனங்களுக்கு. ஒரு பொம்பளையவோ ஆம்பளையவோ இதுவரைக்கும்



பாக்காத கோலத்துல பாக்கிறதுல யாருக்கும் ஒரு ஆவலாதி இருக்கத் தான் செய்யுது.

கோழிச்சண்டைக்கே கூட்டம் கூடுற ஊர்ல பேயோட்டுற வீட்ல இருக்காதா? அதுலயும் இவ சின்னவ; இப்பத்தான் கல்யாணமாகி அத்துவிடச் சொல்லிப் பஞ்சாயத்துல நின்ன பிள்ள. கூட்டத்துக்குக் கேக்கணுமா? தெருவுல- திண்ணயில- வாசல்ல- வீட்டுக்குள்ள- தொழுவுல- ஒரல்ல- சாலுமேல... முந்துனவுகளுக்கு மொத எடங்கிற கணக்குல கூடிக் குமுஞ்சு போச்சு ஆணும் பொண்ணும்.

வீட்டுக்குள்ள இருக்கிற தெறந்த வாசல்ல சாணி தெளிச்சு மொழுகி, சாக்கு பழைய துணியெல்லாம் பரப்பி

அதுக்கு மேல ஒரு சமுக்களாம் விரிச்சு, சூடம் கொளுத்தி, பத்தி பொருத்தி சாம்பிராணி போட்டு, குங்குமம் சந்தனம் மல்லிகைப்பூ வாங்கித் தரையில படைச்சு, தேங்கா பழத்தோட தனக்கு ஒண்ணேகால்ரூவா தட்சணையும் வாங்கிக்கிட்டு "பிள்ளையைக் கூட்டிட்டு வாங்காத்தா"ன்னு சொல்லிட்டு, பேயாடப் போற பெண்ணுக்குத் துண்டாப் பாய்போடச் சொன்னாரு கோடாங்கி.

ஊர்ப் பொம்பளைக கருவாச்சியக் கூட்டிட்டு வாராக கைத்தாங்கலா. அவளுக்கு நட, கூடி வரல. வில்லா வெறச்சு வர்றா.

பல்லுவேற கிட்டிச்சுக்கிருச்சு. தொண்டக் குழியிலிருந்து என்னமோ வார்த்த வருது- வர்ற வார்த்தையை நாக்கு தட்டி விட்டுருது; கொளர்றா.

"வாழத்தண்ட அடுப்புல வச்ச மாதிரி பச்ச மண்ணுக்கு இப்படி ஒரு பழிபாவம் வந்திருச்சே"ன்னு பொலம்புதுக கெழடுகட்டைக.

நாடகம் போடப் போறாகங்கிற மாதிரியே கண்ணுல மனசத் தேக்கிச் சம்மணங்கால் போட்டு ஒக்காந்திருக்குதுக சின்னஞ்சிறுசுக.

செவக்கி ஒக்கார முடியாமச் சாஞ்சு விழுந்து கருவாச்சிக்கு கால் ரெண்டையும் மடிச்சு விட்டு முட்டிக்கால் பொட்டு விடவும், அவ மளார்ன்னு கவுநது தலையைத் தரையில போட, பாயே தெரியாம பரவிக் கெடக்கு அவ குடுமிக்காடு. *(தொருடம்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

...நீங்கள் உங்களுக்கு நேரம் ஒதுக்குவதில்லை. ஏனெனில் உண்மை வெளியே வந்துவிடும். அதை உங்களால் தாங்க முடியாது என்று அஞ்சுகிறீர்கள். ஆனந்தத்தை தவறான இடங்களில் தேடிவிட்டு அது உங்களிடமிருந்து நழுமி விடுவதாக குறை கூறுவது உங்களுக்கு வசதியாக இருக்கிறது. உங்களுக்கு உண்மையிலேயே ஆனந்தத்தைக் கண்டுபிடிப்பீர்கள்.

ஆனால் அதற்கு தைரியம் வேண்டும்.

உண்மையில் நாம் அனைவரும் தேடுவது ஒன்றைத்தான். அதுவே ஆனந்தம். ஆனால் நாம் தொடர்ந்து தவறான இடங்களிலேயே தேடிக் கொண்டிருக்கிறோம். நான் ஒரு இளைஞனை அவனுக்கு எது சந்தோஷத்தைத் தருகிறது என்று கேட்டால் அவன் உடனே போதைப் பொருள் என்று சொல்கிறான். அவனும் ஆனந்தத்தையும் முடிவுற்ற அமைதியும் தான் தேடுகிறான். ஆனால் தவறான திசையில்!

நாம் நமது பாதையிலிருந்து வெகு தூரம் தள்ளி வந்துவிட்டோம். நமது சுயமான சிந்தனை முறையே எதிர்மறையான எண்ண வடிவ அமைப்புகளால் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. நமது வாழ்க்கையே இருக்க வேண்டிய முறையிலிருந்து மிகவும் வேறாக இருக்கிறது. போதைப் பொருட்களை உட்கொள்ளுவதானால் நீங்கள் உங்களிடமிருந்து தப்பிப்பது மட்டுமல்ல சூழ்நிலையும்

மோச மாக்கி விடுகிறீர்கள். ஏனெனில் ஒரு நாள் உங்கள் உடல்நிலை கவலைக்கிடமாகிவிடும். இவை அனைத்திலும் உள்ள முட்டாள்தனத்தைப் பாருங்கள்.



இது மிகவும் கடுமையாக இருப்பதால் உங்களுக்கு முட்டாள்தனமாகப் படுகிறது. இது உங்கள் ஒழுக்க அளவு

கோலின் படி சரியில்லாததால் உங்களுக்கும் சரியற்றதாகப்படுகிறது. ஆனால் இன்பத்தைத் தேடும் மற்ற நுட்பமான செயல்களும் இதைப் போன்றுதான். ஆனால் வேறு அளவு கோலில் இருப்பதால் நீங்கள் அவற்றை முட்டாள்தனமாக கருதவில்லை. உங்களுக்கு நேரம் கிடைக்கும் பொழுது மனதைத்

தூய்மைப்படுத்துங்கள். அப்பொழுது நான் என்ன சொல்ல முயற்சிக்கிறேன் என்பது தெரியும்.

எவ்வாறு உங்கள் மனம் வேலை செய்கிறது? எவ்வாறு உங்கள் கவலைகள் வேர் விடுகின்றன? என்பதை விழிப்புணர்வுடன் உங்களுக்குள் உங்களைக் கவனியுங்கள். நாம் வார்த்தைகளைச் சேகரிப்பதும் அபிப்பிராயங்களை உருவாக்குவதுமாக இதையே திரும்பத் திரும்பச் செய்துகொண்டிருக்கிறோம். இவ்

### ஆன்மீகம் 99

வாறுதான் கவலை வேர்விட்டு தன்னை பலப்படுத்திக் கொள்கிறது.

ஒரு நாள் உங்கள் மகன் வீட்டிற்கு வரத் தாமதமானாலும் ஏதோ கெட்ட சகவாசத்தினால்தான் இவ்வாறு தாமதமாகிறது என்று நீங்களாகவே முடிவு செய்கிறீர்கள். இது உங்களுக்குள் ஒரு பதிவாகிவிடுகிறது. அடுத்த முறை அவன் வகுப்பிலிருந்து தாமதமாக வந்தாலும் இந்தப் பதில் மேலே வந்து நீங்களும் அதற்கேற்றார் போல் செயற்படுகிறீர்கள்.

இது உங்கள் மகனை விரக்தியடையச் செய்வது மட்டும்மல்ல. உங்கள் பேச்சை மீறி எதிர்த்து நடக்கவும் நிர்ப்பந்திக்கிறது.

*(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் நட்பினை மறந்து கொள்கைக்காகவே வந்தோம்

## ராஜித எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டின் மத சுதந்திரத்தை ஏற்படுத்தி புதிய கலாசார யுகமொன்றை உருவாக்கவே மகிந்த ராஜபக்ஷ மீதான நட்பினை மறந்து கொள்கையை அடிப்படையாகக் கொண்டே அரசிலிருந்து வெளியேறி வந்தோம். எமக்கு நட்பைவிடவும் கொள்கையே முக்கியத்துவம் வாய்ந்தது என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

யுத்தம் நிறைவடைந்து பின்பு நாட்டில் மத நல்லிணக்கத்தை இந்த அரசு ஏற்படுத்தவில்லை. ஆகவே, ஜனவரி 9 ஆம் திகதி இலடசக்கணக்கான விருப்பு வாக்கு வித்தியாசத்தில் பொது வேட்பாளர் வெற்றி பெறுவார். குறித்த பெறுபேறானது மத சுதந்திரத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு தெவட்டகஹ பள்ளி வாசலுக்கு நேற்று முன்தினம் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன விஜயம் செய்த பின்பு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,நாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தினோம். அரசிற்கு பலமுறை அறிவுரை கூறினோம். இருப்பினும் எமது பேச்சை தட்டி கழித்து மதங்களுக்கிடையிலும் இனங்களுக்கிடையிலும் பொறாமையையும் வைராக்கியத்தையும் அரசாங்கம் ஏற்படுத்தியது.

எனினும் அரசாங்கம் யுத்தத்திற்கு பின்பு நாட்டில் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் மத நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த தவறி விட்டது. இருப்பினும் அதற்கு பதிலாக இனவாதத்தை போஷித்தது. 'மேலும், அடிப்படைவாதிகளுடன்' இணைந்து செயற்படுகிறோம். நாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மீதான நட்புறவை உதறி தள்ளிவிட்டு மைத்திரிபால சிறிசேன என்ற நல்ல குணநலமிக்க சிறந்த கொள்கையுடையவருடன் இணைந்தோம். நாட்டில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தி புதிய கலாசாரத்தை உருவாக்கவே அரசிலிருந்து வெளியேறியது. எனவே, எமக்கு நட்பை விடவும் கொள்கையே முக்கியமாகும்.

புதிய கலாசாரத்தினூடாக பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமில்லை. அதுவே மைத்திரி யுகத்தின் உதயமாகும்.

எனவே, இன, மத சுதந்திரத்தை ஏற்படுத்தும் முக்கிய வேலை திட்டத்தை நாம் நாட்டில் ஏற்படுத்த வேண்டும். ஆகவே, ஜனாதிபதி தேர்தலில் இலட்சக் கணக்கான விருப்பு வாக்குகள் வித்தியாசத்தில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவார்.

இதற்கமைய ஜனவரி 9 ஆம் திகதி வெளிவரும் தேர்தல் பெறுபேறானது நாட்டில் மத இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஹிருணிகாவின் படங்களை காட்சிப்படுத்த தடையுத்தரவு

மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தேசிய ரூபவாஹினி தொலைக்காட்சியின் நுகசெவன நிகழ்ச்சியில் வழங்கி வந்த, ஹிருணிகாவுடன் சட்டம் என்ற விசேட அங்கம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் இருந்து தொலைக்காட்சியின் அதிகாரிகளுக்கு இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதனை தவிர ஹிருணிகா காணப்படும காணொலிகளையோ, புகைப்படங்களையோ தொலைக்காட்சியில் ஒளிபரப்ப வேண்டாம் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஹிருணிகா தொலைக்காட்சியில் வழங்கி வந்த இந்த நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் உள்ள மக்களின் சட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப் பட்டு வந்தது. ஹிருணிகா பிரேமச்சந்திர அரசாங்கத்தில் இருந்து விலக தயாராகி வருவதாக தகவல்கள் வெளியான நிலையில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 120-125 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 |
| தக்காளி | 160-170 | 180 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 40 | 50 |
| கோவா | 120 | 120 | 160 |
| கரட் | 210 | 200 | 200 |
| பூசணி | 30-40 | 50 | 50 |
| புடோல் | 60 | 120 | 80 |
| வாழைக்காய் | 50-70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 60-105 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 100 |
| பாகற்காய் | 220 | 300 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 40-50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 250-300 | 250 | 160 |
| லீக்ஸ் | 200 | 260 | 240 |
| பீற்றூட் | 170-180 | 180 | 200 |
| கறிமிளகாய் | 200 | 340 | 240 |
| முருங்கைக்காய் | - | 400 | 400 |
| போஞ்சி | 220 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | - | 120 | 140 |
| கீரை - 1 பிடி | 10-25 | 50 | 40 |
| தேசிக்காய் | 60-80 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35-45 |
| இராசவள்ளி | - | 150 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 217

பிருந்தன்




பிச்சைக்கார நலச்சங்கம்




ராஜமணி சுப்ரமணி





இரத்தினசபாபதி பாலராஜா




சத்தீஸ் சியானி




கனகரத்தினம் சீர்த்தனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சி தாவ தயார் நிலையில் அமைச்சர் பந்துல!

# மகிந்தவுக்கு அடுத்த ஆப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆதரவளிக்க வில்லை என பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன குற்றம் சுமத்தியுள்ளார். ஹோமாகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றின் போது அவர் பகிரங்க மேடையில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி மகிந்தவிற்கு ஆதரவு திரட்டும் நோக்கில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரசன்னமாகியிருக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹோமாகம தேர்தல் தொகுதி தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். இந்த தொகுதியில் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் இருக்கின்றார்.

சிரேஷ்ட மாகாணசபை உறுப்பினர் ஒருவர் இருக்கின்றார். அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த இடத்திற்கு வரவில்லை.

இதனையிட்டு நான் வருந்துகின்றேன். அமைச்சரை நான் அழைத்தேன், பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் கூட்டத்தில் பங்கேற்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தை அல்ல இதுவே முக்கியமானது என நான்கூறினேன.

பேச்சுவார்த்தைகளை ஒத்தி வைத்து விட்டு கூட்டத்தில் பங்கேற்குமாறு கோரினேன். ஐந்து நிமிடங்களின் பின்னர் கூட்டம் ஆரம்பமாகிவிட்டது வர முடியாது என தெரிவித்தார். கட்சியில் முரண்பாடுகள், பிளவுகள் காணப்படுகின்றன.

அமைப்பாளர்களுக்கு இடையில் சில பிரச்சினைகள் உண்டு.

எனினும், அதற்காக இந்த தேர்தல் நேரத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிக்கொள்வது வேதனையளிக்கின்றது என அமைச்சர் ஜோன் செனவிரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பாதிப்பின்றி பிரசாரங்களை முன்னெடுங்கள்

### போட்டியிடும் கட்சிகளுக்கு ஜனாதிபதி வேண்டுகோள்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையிலேயே அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியூடாக வேண்டுகோள் முன் வைத்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் செயற்படுவோரை பாரபட்சமின்றி கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்திருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று முன் தினம் தெரிவித்தார்.

வேட்பு மனு தாக்கல் நேற்று நிறைவடைந்ததை தொடர்ந்து தேர்தல் பிரசாரங்கள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை 9ஆம் திகதி முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு டார்லி வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் டலஸ், ஜனாதிபதியின் வேண்டுகோளை முன்வைத்தார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மாணவர்களின் கல்வி மற்றும் பரீட்சைகளில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடாதென அக்கறை கொண்டிருக்கும் ஜனாதிபதி ஐ.ம.சு.மு. உறுப்பினர்களிடம் மட்டுமன்றி அனைத்து கட்சிகளிடமும் இந்த வேண்டுகோளை முன் வைத்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அரசாங்கத்தில் இருந்து மேலும் சிலர் செல்லலாம்

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்று எண்ணினால், தனக்கு தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தில் இருப்பவர்கள் அதிருப்தியில் உள்ளனர். எதிர்காலத்தில் மேலும் சிலர் அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கூடும்.

எதிர்க்கட்சியில் இணைந்து கொள்பவர்கள் பற்றி என்னால் உறுதிகளை வழங்க முடியாது. எனினும் சிலர் பல்வேறு அழுத்தங்களின் மத்தியில் இருக்கக் கூடும.

உண்மையான அழுத்தமான நிலையின் கீழ் தீர்மானங்களை எடுப்பவர்கள் இருக்கின்றனர். அத்துடன் பொருளாதார சிறப்புரிமைகளின் கீழ் தீர்மானங்களை எடுப்பவர்களும் உள்ளனர்.

உதாரணமாக மாத்தறை மாவடத்தில் போட்டியிட்டு என்னால் வெற்றி பெற முடியாது என்று நான் எண்ணினால் என்ன செய்வது?.

மாத்தறையில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு வர முடியாது என்று எண்ணினால் எனது அடுத்த மாற்று வழியென்ன?. நான் மாற்று வழியை தேடுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இலங்கைப் பணிப் பெண்களை திருப்பியனுப்பியது சவுதி அரசு

சவுதி அரேபியாவில் மனித உரிமை மீறல் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண்கள் உட்பட சில நாடுகளின் பணிப்பெண்கள் அவர்களது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5 மாதங்களில் இவ்வாறு குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கிய ஆயிரத்து 896 வீட்டுப் பணிப் பெண்கள் அவர்களது சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், இலங்கை, எதியோப்பியா உள்ளிட்ட நாடுகளின் வீட்டுப் பணிப்பெண்கள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், கசகஸ்தான், கொலம்பியா, பங்களாதேஷ், வியட்நாம், உஸ்பெகிஸ்தான், கம்போடியா, நேபாளம், லாவோஸ், இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வீட்டுப் பணிப்பெண்களை சேவைக்கு அழைப்பது என சவுதி அரேபியா தீர்மானித்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வீட்டுப் பணிப்பெண்களாக அழைக்கப்படும் பெண்களுக்கு சவுதி அரேபியாவின் சட்டத்திட்டங்கள் குறித்து முழுமையான புரிந்துணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# குறைமாத பிரசவம் தடுக்க...தவிர்க்க!


(சென்ற வாரத் தொடர்ச்சி...)

ஆனால், பனிக்குடம் உடைந்து 6, 8 மணி நேரத்துக்கு மேல் ஆகியும், சுகப்பிரசவத்துக்கு வாய்ப்பு இல்லை எனில், அறுவை சிகிச்சை அவசியம். அப்படி செய்யாதபோது, குழந்தைக்கு நோய்த் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. தாய்க்கு, கட்டுப்படுத்த முடியாத அளவு சர்க்கரை அல்லது இரத்த அழுத்தம் இருந்தால், அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். இல்லைஎன்றால், ஃபிட்ஸ் வந்து விடும் அபாயம் உண்டு."

**இந்தக் குழந்தைகளுக்கு என்ன பிரச்சினைகள் வரும்?**

இது போன்ற பிரசவங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு, நுரையீரல் முழு வளர்ச்சி அடைந்திருக்காது என்பதால், கண்டிப்பாக மூச்சுத் திணறல் ஏற்படும். மேலும், மஞ்சள் காமாலை, வேறு தொற்று நோய்கள், இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைதல் போன்றவை உடனடியாக வரும் பிரச்சினைகள். முழு கர்ப்பகாலம் முடிந்து பிறக்கும் குழந்தைகளுக்கு, இரத்த ஓட்டம், பெரியவர்களைப் போல சீராக இருக்கும். ஆனால், இந்த குழந்தைகளுக்கு இரத்த ஓட்டம் தடைப்படும். ஏனெனில், இதய வால்வுகள் மூடிக்கொள்ளாது. அதைச் சரிசெய்ய மருந்து கொடுக்க வேண்டும்.

இவை தவிர, மூளைக்கு ஒட்சி



சன் குறைவதால், மூளை வளர்ச்சி தடைப்படலாம். கை, கால் இயக்கம் மிக மெதுவாக வரலாம். குழந்தையின் தலை நிற்பதில் தொடங்கி, தவழுதல், நடத்தல், பேசுதல் எல்லாமே மிகத் தாமதமாக நடைபெறும். சில குழந்தைகளுக்கு இனப்பெருக்க உறுப்புகளில்கூட பிரசினைகள் வரலாம். அது போன்ற குழந்தைகளை ஐந்து வயது வரை கவனமாகக் கண்காணித்துவர வேண்டும். தேவைப்பட்டால் பிசியோதெரப்பி, ஸ்பீச் தெரப்பி போன்றவற்றை சீக்கிரமே ஆரம்பித்து விடுவது நல்லது.

**குறைமாதப் பிரசவங்களைத் தடுக்க...**

பெண்ணின் இரத்தத்தில் குறிப்பிட்ட அளவு போலிக் அமிலம் இருந்தால்தான், குழந்தையின் மூளை வளர்ச்சி நன்றாக இருக் கும். குழந்தைக்குத் திட்டமிடும் போதே, டாக்டரின் ஆலோசனைப்படி, போலிக அமிலம், இரும்புச்சத்து மாத்திரைகளை எடுத் துக்கொள்ளலாம்.

திருமணத்துக்கு முன்னரே எல்லாப் பெண்களும் HBsAG என்னும் வைரஸ் பரிசோதனை செய்து, தடுப்பூசி போட்டுக்கொள்வது நல்லது. எம்.எம்.ஆர் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்யவேண்டும்.

பெற்றோரில் யாருக்கேனும் ஒருவருக்கு நீரிழிவுநோய் இருந்தால், மகளுக்கு கர்ப்பகால நீரிழிவு நோய் வர 25 சதவிகிதம் வாய்ப்பு உள்ளது. அப்பா, அம்மா இருவருக்குமே இருந்தால், 50 சதவிகிதம் வாய்ப்பு உண்டு.

தாய்க்கு சர்க்கரை இருந்தால், குழந்தையின் உறுப்புகள் சரியாக

**Health Care மருத்துவ உலகம் உங்கள் நலம் உங்கள் கைகளில்**

உருவாகாமல் இருக்கும். அதுகூட குறைமாதப் பிரசவத்துக்கோ அல்லது கரு கலைந்துபோவதற்கோ காரணமாகக்கூடும். எனவே, சர்க்கரை அளவை அவ்வப்போது பரிசோதித்து, கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

முதல் கர்ப்பத்தில் குறை மாதப் பிரசவம் எனில், அடுத்த முறையும் அது நிகழ்வதற்கு வாய்ப்புகள் அதிகம். எனவே, ஆரம்பத்திலிருந்தே கவனமாக இருக்க வேணடும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சூடுபிடிக்கும் போர்க்குற்ற விவகாரம்!

சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் போர்க்குற்றங்கள் முக்கிய இடத்தைப் பிடிக்கத் தொடங்கியுள்ளன.

முன்னர் போர்க்குற்றங்கள் என்ற சொல்லையே, ஒரு தீண்டத்தகாத சொல் போலக் கருதிய





சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இப்போது அதுபற்றி அதிகம் செய்திகளை வெளியிடத் தொடங்கியுள்ளன.

அரசியல் மேடைகளுக்கு அப்பாலும் போர்க்குற்றங்கள் என்ற விவகாரம் இப்போது முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்யும் ஐ.நா. குழு மிகவும் அமைதியாக எந்தத் தகவல்களும் வெளியே கசிந்து விடாத வகையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

அந்த விசாரணைக் குழுவுக்கு சன்ட்ரா பெய்டாஸ் என்ற மனித உரிமை நிபுணர் தலைமை தாங்குகிறார். மார்ட்டி அதிசாரி, அஸ்மா ஜகாக்கீர், டேம் சில்வியா கார்ட்ரைட் ஆகியோரை அடங்கிய நிபுணர் குழு அதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

இவை தவிர விசாரணைக் குழுவின் விபரங்களோ அந்த விசாரணை மேற்கொள்ளப்படும் முறை குறித்த தகவல்களோ வெளியே விடப்படவில்லை.

ஒருபக்கத்தில் இது இலங்கை அரசாங்கத்தினால் கேள்விக்குட்படுத்தப்பட்டாலும் கூட ஐ.நா. தனது இரகசியம் பேணும் நடவடிக்கையில் உறுதியாக இருக்கிறது.

தகவல்கள் பகிரங்கமாவது இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரையில் சாட்சிகளுக்கும் விசாரணையாளர்களுக்கும் ஆபத்தானது என்பதால்தான் இத்தகைய உயர் இரகசியம் பேணப்படுகிறது.

விசாரணை பற்றிய இரகசியங்களைப் பேணுவது தமது பொறுப்பு என்று ஐ.நா. ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இந்த விசாரணை அறிக்கை இன்னும் மூன்று மாதங்களுக்குள் தயாராக வேண்டும் என்பதால் விசாரணை அதிகாரிகள் தீவிரமாகப் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது.

அதேவேளை, இந்த விசாரணை அறிக்கை இலங்கைக்கு சாதகமாக அமையாது என்ற கருத்து பரவலாகவே காணப்படுகிறது.

இலங்கை அரசாங்க மட்டத்தில்கூட இந்த அறிக்கை பற்றிய ஒரு அச்சம் பரவியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

இந்த அடிப்படையிலும் இதனை வைத்து அரசியல் ஆதாயத்தை தேடிக்கொள்ளும் நோக்கிலும் தான், தற்போதைய அரசியல் மேடைகளில் போர்க்குற்றங்கள் எனற சொல் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் போர்க்குற்றங்கள் குறித்து பேசுகிறார்.

எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் அதுபற்றி பேசுகிறார். சஜித் பிரேமதாஸவும் பேசுகிறார். ஜாதிக ஹெல உறுமயவும் பேசுகிறது.

மொத்தத்தில் முன்னர் ஒரு காலத்தில் இவர்கள் எல்லோராலும் வெறுக்கப்பட்ட போர்க்குற்றங்கள் என்ற சொல் இப்போது இவர்களுக்கும் மிகவும் தேவையான தொன்றாக மாறிவிட்டது.

வரும் ஜனாதிபதி தேர்தலில் போர்க்குற்றங்கள் முக்கியமானதொரு பேசுபொருளாக மாறியிருக்கிறது.

இது நல்லதா கெட்டதா யாருக்கு சாதகமானது யாருக்கு பாதகமானது என்பதற்கு அப்பால் போர்க குற்றங்கள் என்ற விவகாரத்தின் மீதான விழிப்பை ஏற்படுத்தச் செயதுள்ளது என்பதே முக்கியமானது.

மேற்குலகின் கைப்பொம்மையாகத் தான் ஆட மறுப்பதால் தான் தன் மீது போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, சர்வதேச நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

அதற்கு உள்ளூரிலுள்ள சிலரும் துணை போவதாகவும் கடந்த வாரம் மாத்தறையில் நடந்த கூட்டம் ஒன்றில் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்குப் பின்னால் இந்த விவகாரத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கம் ஒழிந்திருப்பதை எவரும் மறுக்க முடியாது.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு சாதகமாகி விடும் என்பதால்தான், ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையோ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவையோ அல்லது எந்தவொரு படை அதிகாரிகளையோ போர்க்குற்ற விசாரணைகளுக்காக சர்வதேச நீதிமன்றத்துக்கு அனுப்ப மாட் டேன் என்று கூறியிருக்கிறார் மைத்திரிபால சிறிசேன.

மைத்திரிபால சிறிசேன எதிரணியின் பொது வேட்டபாளராக நிறுத்தப்பட்டது ஒரு மேற்குலக சூழ்ச்சி என்றும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும், அவரது குடும்பத்தினரையும் படையினரையும் சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கான முயற்சி என்றும் அரசதரப்பு அனுதாபம் தேட முனைந்தது.

இத்தகைய கட்டத்தில் அந்த முயற்சிகளை முறியடிக்க தாம் ஜனாதிபதியானால், அவர்களை அரணாக நின்று காப்பேன் என்று சத்தியம் செய்திருக்கிறார் மைத்திரிபால சிறிசேன.

ஏற்கனவே ஐ.தே.க பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கூட இதுபோன்றுதான் கூறியிருக்கிறார்.

தாம் ஆட்சிக்கு வந்தால் போரை நடத்திய எந்தவொரு தற்போதைய அரசாங்கத் தலைவரையோ, இராணுவத்தினரையோ சர்வதேச நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்ல அனுமதிக்கப் போவதில்லை என்று அவர் தெரிவித்திருந்தார்.

இதுமட்டுமன்றி, ஜாதிக ஹெல உறுமயவுடன் எதிரணியின பொது வேட்டபாளர் மைத்திரிபால சிறிசேன செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டில் கூட போர்கக்குற்றங்களுக்காக எந்தவொரு நபரையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தும் முயற்சிகளை எதிர்ப்பேன் என்று கூறியுள்ளார்.

ஆக இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று நிகழ்ந்தாலும் கூட போர்க்குற்றங்கள் விவகாரத்தில் அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றங்கள் ஏதும் வரப் போவதில்லை என்பது உறுதி.

ஐ.நா. தற்போது நடத்தும் விசாரணைகளில் எவர் மீதாவது குற்றம் சுமத்தினாலும் சரி, அதற்கு அடுத்த கட்டமாக மேற்கொள்ளப் படக் கூடிய எத்தகைய விசாரணைகளிலும் யாரேனும் போர்க்குற்றவாளிகளாக அடையாளம் காணப் பட்டாலும் சரி அவர்களைப் பாதுகாப்பதாக இப்போதைய எதிரணித் தலைவர்கள் சிங்கள மக்களுக்கு உறுதியளித்திருக்கிறார்கள்.

சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு அளிக்கும வாக்குறுதிகள் வேண்டுமானால் மீறப்படலாம். ஆனால் சிங்கள மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகளை அவர்களால் மீற முடியாது.

எனவே இலங்கையில் ஆட்சி மாற்றம் என்பது, போர்க்குற்றங்களுக்கும் நியாயம் தேடும் தரப்பினருக்கு எந்தவொரு வகையிலும் ஊக்கமளிப்பதாக இருக்கப் போவதில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மிகவும் இக்கட்டானதொரு சூழலில் தனது எஞ்சிய பதவிக்காலத்தை இழந்து தேர்தலை நடத்த துணிந்தாரேயானால் அதற்கு முக்கிய காரணம் தற்போது அனுபவிக்கும் இராஜதந்திர சலுகைகளை தொடர்ந்து பெறுவதுதான்.

ஜனாதிபதி பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ச கீழ் இறக்கப்பட்டு விட்டால் தன்னை நோக்கி குற்றச்சாட்டுகள் சுலபமாக நீட்டப்படும் என்பதை அவர் நன்கறிவார்.

அதனால்தான் எப்படியும் மூனறாவது தடவை பதவிக்கு வந்து விட வேண்டும் என்ற பிடிவாதம் அவரிடம் இருக்கிறது.

எனவேதான் இந்தத் தேர்தலில் தோல்வியுற்றால் மகிந்த ராஜபக்சவை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல முடியும் என்று உலகத் தமிழர் பேரவை பேச்சாளர் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால், இது சிங்கள வாக்காளர்களிடம் மகிந்தவுக்குச் சார்பான கருத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

இதனைக் கலாநிதி தயான் ஜயதிலக போன்றவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அதனால்தான் ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை புலம்பெயர் தமிழர்கள் போர்க்குற்றங்கள் குறித்துப் பேசாமல் இருப்பதை உறுதிப்படுத்த எதிரணியில் உள்ளவர்கள் தமிழ் அரசியல் பிரமுகர்கள் மூலம் முயற்சிக்கின்றனர்.

எதிரணியில் உள்ள தலைவர்கள் போர்க்குற்றங்கள் குறித்து தமிழர் தரப்பிடமிருந்து எந்தக் கருத்தும் வெளிவருவதை விரும்பாத அதேவேளை, போர்க்குற்றங்களில் ஈடுபட்டது உறுதியானால் பாரபட்சமின்றி தண்டிக்க நடவடிக்கை எடுப்போம் என்று உறுதிப்படுத்தவும் தயாரில்லை.

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் போதும் என்று மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

ஆனால் அதற்கு மைத்திரிபால சிறிசேனவின் இப்போதைய கூட்டாளியான சம்பிக்க ரணவக்க எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்.

ஆக போர்க்குற்றங்கள் பொறுப்புக்கூறல் விவகாரங்கள் தமது வெற்றியைப் பாதித்து விடக் கூடாது என்பதில் மட்டும் எதிரணித் தலைவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்று கருதுவதற்கில்லை.

போருடன் சம்பந்தப்பட்டவர்களைப் பாதுகாப்பதிலும் அவர்கள் உறுதியாகவே இருக்கிறாரகள்.

இந்தப் போக்கு எதிரணியின் பொது வேட்டபாளர் தமிழர் தரப்பின் வாக்குகளை அதிகளவில் பெறுவதற்கு உதவும் என்று கொள்ள முடியாது.

போர்க்குற்றங்களால் தமிழர்கள் பெரும் பாதிப்புகளைச சுமந்து நிற்கின்றனர். இத்தகைய நிலையில் போர்க்குற்ற விவகாரங்கள் தமிழர்களின் வாக்குகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைச் செலுத்தவே செய்யும்.

சிங்கள மக்களிடம் இந்த விவகாரத்தை வைத்து எவ்வாறு வாக்குகளைப் பெறலாம் என்று சிந்திக்கின்ற அளவுக்கு தமிழர்களின் வாக்குகளில் அது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை எதிரணித் தலைவர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

அவர்கள் வெளியிடும் கருத்துக்களே அதற்குச் சாட்சி.

சுபத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி முத்திரை குத்துகின்றனர்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சிக்கு புலி முத்திரை குத்துகின்றனர். ஆனால், அது எவ்வளவு பொய்யான விடயம் என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்தார்.**



கண்டி, ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கை செலவை வானத்துக்கே உயர்த்திய இந்த அரசுக்கு மக்கள் மத்தியில் சென்று வாக்குகளை கோருவதற்கு எவ்வித தகுதியும் இல்லை.

பல நூற்றாண்டு காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த மக்களை இன,மத ரீதியாக பிரித்து சிறுபான்மை மக்களுக்கு பாரிய கஷ்டத்தை இந்த அரசு கொடுத்துள்ளது.

சிறுபான்மை மக்கள் மீது வன்முறைகளை மேற்கொண்டவர்களுக்கு எதிராக இந்த அரசு எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் மக்கள் மத்தியில் சென்று வாக்குகளை கோருவதற்கு இந்த அரசுக்கு எவ்வித தகுதியும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# போரின் முழுப்பொறுப்பும் மகிந்தவையே சாருமாம்

## கோத்தபாய ஒப்புதல்



எவரின் உந்துதல் காரண மாகவும் இறுதிப் போரின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவுகளை எடுக்கவில்லை. அவரே தனித்து அந்த தீர்மானங்களை மேற்கொண்டார் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபர்ய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இறுதிப்போருக்கு தாம் உந்துதலை மேற்கொண்டமை காரணமாகவே ஜனாதிபதியினால் தீர்மானங்களை மேற்கொள்ள முடிந்தது என்று அண்மையில் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ, இந்த விடயத்தில் யாரும் ஜனாதிபதியிடம் கேட்கவில்லை.

ஜனாதிபதி தாமாகவே அரசியல் முடிவுகளை மேற்கொண்டு இறுதிப் போரை முன்னெடுத்தார் என்று கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

ஹோமாகமயில் அண்மையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் பங்கேற்ற அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி ஈழப்போரை முடிவுக்கு கொண்டு வர ஜனாதிபதி திட்டம் வகுத்தார்.

இதன்படியே விடுதலைப் புலிகளுக்கு பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புங்கள்

## ஜே.வி.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்துள்ள ஜே.வி.பி., எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை பகிரங்கமாக ஆதரிக்கப்போவதில்லை என்றும் கூறியுள்ளது. ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். ஜனவரி 8 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கும் வகையில் வாக்களிக்குமாறு மக்களை தாம் கேட்டுக்கொள்வர் என்று தெரிவித்துள்ள அவர், ஜே.வி.பி., வேறு எந்த வேட்பாளருக்கும் ஆதரவாக பிரசாரத்தை மேற்கொள்ளாது என்றும் கூறியுள்ளார். "எமது நிலைப்பாடு தெளிவானது. நாங்கள் இந்தத் தேர்தல் சட்டவிரோதமானது என்று கருதுகிறோம். இதன் காரணமாகவே நாங்கள் வேட்பாளரை நிறுத்தவில்லை. நாங்கள் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முயலுவோம். அதே வேளை, ஏனைய வேட்பாளர்கள் குறித்து நாங்கள் உறுதியளிக்க மாட்டோம். ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் என்ன நடக்கும் என்பது குறித்தே நாங்கள் கவனம் செலுத்துகிறோம். மக்களின் கண்களுக்கு முன்னால் பல சட்ட விரோத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எங்கே நிம்மதி

ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார். நிறையப்பேர் அவரிடம் சென்று உபதேசம் கேட்பது வழக்கம். அவர் தினமும் மெய்ப்பொருள் உண்மைகள் பற்றி விளக்கி சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு செல்வந்தர், தினமும் அவர் கூறும் நல்ல பல கருத்துக்களை கேட்க வருவார். அவர் சொல்வதையெல்லாம் அக்கறையுடன் கேட்பார். அவருக்கு ஒரு சந்தேகம் அதை முனிவரிடமே நேரடியாகக் கேட்டார்.

"சுவாமி! நானும் நீண்ட நாட்களாக உங்கள் உபதேசங்களைக் கேட்டு வருகிறேன். நீங்கள் சொல்லும் பயிற்சிகளையெல்லாம் செய்கிறேன். இருந்தாலும் உங்கள் முகத்தில் தெரியும் அமைதி, தெளிவு, ஒளி களங்கமில்லாத சிரிப்பு எதுவும் என்முகத்தில் தெரியவில்லையே! அதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.

முனிவர் சிரித்தார். பின் அந்த செல்வந்தரைப் பார்த்து "மகனே! நீ மரணபயத்தை வெல்லவேண்டும்! அப்பொழுது தான் உனக்கு அந்த நிலை வரும்" என்றார்.

"மரணபயத்தை எப்படி வெல்வது? அதற்கு நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்!" என்றார் இவர். இவருக்கு உண்மையை உணர்த்த வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதைப்புரிந்து கொண்ட முனிவர் "மகனே! நான் உனக்கு ஒருஉண்மையைச் சொல்லப்போகிறேன். அதைக் கேட்டு அதிர்ச்சியடையக்கூடாது. மனதைத்திடப்படுத்திக்கொள்.

இன்னும் 15 நாட்களில் நீ சாகப்போகிறாய்! அதாவது, வருகிற தைமாதம் 16 ஆம் திகதி மாலை 6 மணிக்கு உனக்கு மரணம் சித்திக்கும்!" என்றார்.

செல்வந்தருக்கு "திக்" கென்றது. கொஞ்சநேரம் பேசாமல் இருந்தார். பின் ஒரு வழியாக மனதைத் திடப்படுத்திக் கொண்டு எழுந்தார்.

"சுவாமி! நான் இன்னும் 15 நாட்கள் தான் இருக்கப் போகிறேன். அதற்குள் நான் செய்ய வேண்டிய பொறுப்புக்களையும் கடமைகளையும் முடிக்க வேண்டும். அதனால் நீங்கள் இருக்கும் இடத்துக்கு வர நேரம் கிடைக்காது. தயவு செய்து பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறி வேகமாக வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தார்.

அன்றிலிருந்து இடைவிடாது உழைத்தார். கொடுக்கல் வாங்கல்களையெல்லாம் சரி செய்தார். நில புலன்களையெல்லாம் பிள்ளைகளுக்குப் பிரித்துக் ொடுத்தார். ஒரு வழியாக எல்லாப் பொறுப்புக்களிலிருந்தும் விடுபட்டார். முனிவர் சொன்ன கெடுமுடிய நேரம் வந்து விட்டது. இறப்பதற்கு 1 மணி நேரம் தான் இருந்தது. இதற்குள் முனிவரைப் பார்த்து விடைபெற்று வரலாம் என்று புறப்பட்டார்.

"சுவாமி! ஒரு வழியாக எல்லா கடமைகளையும் முடித்துவிட்டேன். எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து விட்டேன். இப்பொழுது என்மனதில் ஒன்றுமே இல்லை. இறப்பதற்கு நான் தயார்" என்று சொல்லிவிட்டு அமைதியாக சிரித்தார். முனிவர் புன்முறுவல் பூத்தார்.

"மகனே! இப்பொழுது உன்முகத்தை கண்ணாடியில் பார் என்றார். இவரும் பார்த்தார். அந்த முகத்தில் அமைதி, தெளிவு, ஒளி, களங்கமில்லாத சிரிப்பு எல்லாம் தெரிந்தது. முனிவர் சொன்னார்.

மகனே! கோடி கொடுத்தாலும் இந்தச் செல்வம் உனக்கும் கிடைக்காது. உண்மையில் உனக்கு ஆயுள் முடியவில்லை. மரணபயத்தை எப்படிவெல்வது என்பதை உனக்கு புரிய வைப்பதற்காகத்தான் இந்த சோதனை. அதில் நீ தேறியும் விட்டாய்!" என்றார்.

இந்தக்கதையை கூறியவர் பதின் கவனகர் (தசாவதானி) திருக்குறள் இராமையா அவர்கள். பற்று குறைய பயமும் குறையும் என்கிறார். அதனால் மரண பயத்தை வெல்ல வேண்டும் என நினைப்பவர்கள் முதலில் பொருள் மேலுள்ள பற்றை வெல்ல வேண்டும். பற்று எங்கே இல்லையோ அங்கேதான் நிம்மதி கிடைக்கும்.

கடையில், வரவு செலவுக்கணக்கு பார்ப்பவர்கள் கூட அன்றைய கணக்கை அன்றே முடிக்க வேண்டும். அதுவே நிம்மதியான தூக்கத்திற்கு வழிவகுக்கும். "நான் கூட வரவு செலவுக்கணக்கை அன்றைக்கே பார்த்து விடுவேன். நேற்றுக்கூட அப்படித்தான். 520 ரூபா இலாபம் கிடைத்தது. இருந்தாலும் எனக்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை" என்றான் ஒருவன்.

"ஏன் அப்படி?" என்று கேட்டேன். அதற்கு அவன் "அந்தக் கடை எனக்குச் சொந்தமில்லை சேர் முதலாளி வேறு ஆள். நான் அதில் வேலை பார்க்கிறவன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சனிப்பெயர்ச்சி பலன்கள்



பொன்னான வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் உருவாகும்!

பார்த்த மாத்திரத்தில் எடை போடுவதில் பலே கெட்டிக்காரர்களான கன்னி இராசி நேயர்களே!

65/100

புதனின் ஆதிக்கத்தால் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளும் உங்களுக்கு ஏழரைச் சனி இப்போது முடிவடைகிறது. இனி உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். சோதனைகளுக்கு மத்தியில் துவண்டு போயிருந்த உங்களுக்கு, வேதனை அகன்று வியக்கும் வாழ்க்கை அமையப் போகிறது.

அதே நேரத்தில் விலகும் சனியை விரும்பி வணங்கினால், உலகில் பலரும் பாராட்டும் விதத்தில் வாழ்க்கை அமையும். அதற்கேற்ற ஸ்தலத்திற்குச் சென்று அங்குள்ள காக வாகனத்தானை கைகூப்பித் தொழுது வாருங்கள். அன்னதானம், சொர்ண தானம், வஸ்திர தானங்களில், இயன்ற வரை ஏதேனும் ஒன்றை செய்து வருவது நல்லது. சனியின் சன்னிதியில் சனி கவசம் பாடுங்கள். எதிர்மறை சொற்கள் இல்லாத பாடல்களை பாடுவதே இனிய வாழ்விற்கு வித்திடும். அனைவருக்கும் நிறைவைத் தருவது அன்னதானம். எனவே சனியின் ஆதிக்கத்தில் இருப்பவர்கள், அன்னதானம் வழங்குவது நல்லது.

முயற்சிக்கு வித்திடும் மூன்றாம் இடத்தில் சனி சஞ்சரிக்கப் போவதால், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். இயல்பான வாழ்க்கையில் இதுவரை ஏற்பட்ட தடைகள் அகலும். ஸ்தம்பித்து நின்ற தொழில் விறுவிறுப்பாக நடைபெறும். தன்னை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்திணைவர். பொன்னும், பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் உயரும். எதிர்கால வாழ்க்கைக்காக தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். ஆரோக்கி

சாட்சி கையெழுத்தால் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும்.


உங்கள் சுயஜாதகத்தில் சனி இருக்கும் நிலையறிந்து, நவாம்சத்தில் அது இருக்கும் இடம், அதோடு இணைந்திருக்கும் கிரகம், அதனைப் பார்க்கும் கிரகம் அனைத்தையும் ஆராய்ந்து, நீங்கள் தேர்தெடுத்துச் செய்யும் தெய்வ வழிபாடு தான் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப்போகிறது. எனவே உரிய பரிகாரங்களைத் தேர்ந்தெடுத்து செய்து உள்ளம் மகிழும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

**ஏழரைச் சனி விலகியது!**
**இனிமேல் வெற்றி தொடங்கியது**

மாபெரும் கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் சனிபகவான். அவர் இதுவரை இரண்டாமிடத்தில் சஞ்சரித்து வந்தார். இப்பொழுது மூன்றாமிடத்திற்கு செல்கின்றார். இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாக்கு, தனம், குடும்பம் ஆகிய ஆதிபத்யங்கள் எல்லாம் வலுப்பெறுகின்றது. எனவே, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போயிருக்கலாம். குடும்ப ஒற்றுமை பாதிக்கப்பட்டிருக்கலாம். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு உருவாகியிருக்கலாம். குடும்பச்சுமை கூடி குதூகலத்தை மறக் கடிக்க வைத்த சனி, இப்பொழுது மூன்றில் அடியெடுத்து வைத்து வாழ்வில் ஏற்பட்ட விரிசல்கள் எல்லாம் ஓட வைக்கப் போகிறது.


மார்கழி 1 ஆந் திகதி முதல் உடன்பிறப்புகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி, கூடப்பிறந்தவர்களின் பாசமழையில் உங்களை நனைய வைக்கப் போகிறது. கருத்து வேறுபாடுகளை மறந்து சகோதரர்கள் உங்களோடு வந்திணைவார்கள். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பழக்க வழக்கங்களில் பலவித மாறுதல்கள் ஏற்படும். வழக்கமாகச் செய்யும் தொழிலில் ஏற்பட்ட தொய்வு அகலும். வசதி வாய்ப்புகள் பெருகும். வீண் விரோதங்களை விலக்கிக் கொள்வீர்கள்.

உத்தியோகஸ்தர்கள் உன்னத நிலை அடைவார்கள். ஊர் மாற்றங்களும், இட மாற்றங்களும், வீடு மாற்றங்களும் ஒவ்வொன்றாக வந்து அமையும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வார்கள்.




படிப்படியாக முன்னேற்றங்கள் ஏற்படும். எதிலும் வெற்றியைப் பெற விஷ்ணுவையும், லட்சுமியையும், அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

**மந்தனின் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!**



உங்கள் ராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனிபகவான், மூன்றாம் இடத்தில் சஞ்சரித்து அதன் பார்வையை 5, 9, 12 ஆகிய இடங்களில் செலுத்துகிறார். எனவே, அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றது. ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன்தரும் என்பார்கள். அதிலும் தன்வீட்டைத் தானே பார்க்கும் சனியால், பிள்ளைகள் ஸ்தானம் வலுவடைகிறது. எனவே, குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அதன் கல்வி வளர்ச்சிக்காகவும், கடல் தாண்டும் முயற்சிக்காகவும் நீங்கள் செய்த ஏற்பாடுகள் வெற்றி தரும்.

சனியின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் தந்தை வழியில் நெருக்கம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும். ஒரு சிலருக்கு பூர்வீக சொத்துக்களால் லாபம் கிடைக்கும். ஒரு சிலர் பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சனியின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் அடிக்கடி பயணங்கள் உருவாகும். எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் வாழ்க்கையும் அமையும். பக்கத்து ஊருக்கு சென்று பலரின் வேலையை ஒப்புக்கொணடு செய்யும் வாய்ப்பும் கிட்டும். மொத்தத்தில் பார்க்கும் சனி யோகத்தை வாரி வழங்க உங்கள் ராசிநாதனுக்குரிய கிழமையோடு யோக நட்சத்திரம் சேரும் நாளில் சிறப்பு வழிபாடுகளை தேர்ந்தெடுத்து செய்தால் வரமும் கிடைக்கும். வளமும் கிடைக்கும்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சிக் காலம்!**

விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது, 3 முறை குருப்பெயர்ச்சி நடைபெறப் போகிறது. 5.7.2015இல் சிம்மத்திலும், 2.8.2016 இல் கன்னி ராசியிலும், 2.9.2017 இல் துலாம் ராசியிலும் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

சிம்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். தடம் மாறிச் சென்ற உறவினர்கள் தானாக வந்திணைவர். குடும்பச் சுமை குறையும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். இல்லத்தில் சுபகாரியங்கள் இனிதே நடைபெற வழி பிறக்கும்.

கனனி ராசியில் குரு சஞ்சரிக்கும்பொழுது,

துள்ளி விளையாடும். விட்டுப்போன வரன்கள் மீண்டும் வந்து சேரும்.

துலாம் ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவதால் வாகனம் வாங்க வேண்டுமென்ற ஆசை பூர்த்தியாகும். நோய், நொடிகள் குணமாகும். புதிய உத்தியோகத்திற்காக விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். பழைய வீட்டைப் புதுப்பித்து கட்டும் எண்ணம் மேலோங்கும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

8.1.2016 இல் சிம்மத்தில் ராகுவும், கும்பத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கூடுதலாக இருக்கும். சிலரின் குறுக்கீட்டால் தொல்லைகள் உருவாகலாம். உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களால் உபத்திரவங்கள் ஏற்படும். நீண்ட

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

தூரப் பயணங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

27.7.2017 இல் கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் காலம் ஒரு பொன்னான காலமாகும். தொழிலில் லாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும். கருத்து வேறுபாடுகள் அகலும். கடல்தாண்டிச் சென்று வியாபாரம் செய்யலாமா என்று சிந்திப்பீர்கள்.

சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் மூன்று முறை வக்ரம் பெறுகிறார். 2015, 2016, 2017 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் வக்ரம் பெறும்பொழுது நன்மைகளையே உங்களுக்கு வழங்குவார். காரணம் 6-க்கு அதிபதியான சனிபகவான் வக்ரம் பெறும் பொழுது, 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கிணங்க எதிர்ப்பு கள் அகலும். இல்லம் தேடி நல்ல செய்தி வந்து சேரும். மதிப்பும், மரியாதையும் உயரும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும்.

**தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் விஷ்ணு ஆலயத்திற்கு சென்று பெருமாளையும், லட்சுமியையும், அனுமனையும் வழிபட்டு வாருங்கள். விஷ்ணுவின் சன்னிதியில் துதி பாடல்களை பாடுங்கள், வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளுங்கள். பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

## இப்போது ஏழரைச் சனி விலகியது
## இனிமேல் எதிலும் வெற்றிதான்!

யம் சீராகி ஆனந்தப்படுத்தும். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக மாறும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்ள சனி ஆயத்தம் செய்யப்போகின்றது.

மூன்றாண்டு காலங்கள் சனி முற்கையிடப் போகும். இந்த மூன்றாம் இடத்து ஆதிக்கத்தால் உங்கள் முன்னேற்றம் கண்ணேறு படும் விதத்தில் அமையப்போகிறது. வேறூன்றியிருந்த விரக்தி மனப்பான்மை அகலும.

உயரதிகாரிகளின் ஒத்துழைப்போடு பதவி உயர்வு போன்றவைகளை பெற்றுக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். பணப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். கடன் வாங்கிக் காலம் கழித்தவர்கள்கூட இப்பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

இதுவரை இருந்த தடைகள் அகன்று,

அதன் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

முயற்சிக்கும் காரியங்களுக்கும் மூல தனத்தை மூத்த சகோதரர் வந்து கொடுக்கலாம். தளர்ச்சி அகலும். தம்பதியர்களுக்கு குழந்தைப்பேறு இல்லையே என்ற கவலை அகலும். தகுந்த பரிகாரங்களை இக்காலத்தில் செய்தால் பிள்ளைச் செல்வம்

நாளை துலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி செய்தியை அடுத்து

# புனரமைக்கப்படுகிறது பாலம்


(முள்ளியவளை)

வலம்புரி செய்தியை அடுத்து முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள காட்டாவிநாயகர் கோவிலுக்கு முன்பாகவுள்ள பெருந்தெருவையும் செங்குந்தா வீதியையும் இணைக்கின்ற சந்தியில் உள்ள பாலத்தின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தியால் மழைக்காலங்களில் வெள்ள நீர் வடிந்தோடுவதற்கு ஏற்றவாறு சிறிய நீர்க்குழாய் அமைக்கப்பட்டு அதனூடாக நீர் வெளியேறியது.

அண்மையில் பெய்த அடைமழையை அடுத்து குறித்த குழாய் ஊடாக மழை வெள்ளம் பாய முடியாமை காரணமாக வீதியை மேவி பாய்ந்துள்ளது.

இதனால் வீதி சேதமடைந்ததன் காரணமாக பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில் அதனைப் புனரமைத்துத் தருமாறு கோரி கடந்த 24 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் சேதமடைந்த வீதியின் பகுதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை எனும் தலைப்பில் செய்தி வெளியானது.



இதனையடுத்து முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் ஒப்பந்தகாரரின் ஊடாக குறித்த வீதியின் பால புனரமைப்புப் பணியை ஆரம்பித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பிக்கப்பட்டுள்ள புனரமைப்பு பணி நிறைவு பெற்றால் தாம் இதனூடாக சீரான போக்குவரத்தை மேற்கொள்ள முடியுமென அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது இப் புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் இடம்பெறுவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2-300)

## கிளி. இரணைமடு குளத்தின் வான்கதவுகள் திறக்கப்படும்

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தில் நீர் மட்டம் 29 கனஅடியாக உள்ளமையால் இப்பிரதேசத்தில் மேலும் மழை பெய்யுமாயின் எவ்வேளையிலும் குளம் திறந்து விடப்படலாம் என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் கமக்கார அமைப்புக்களுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நீரை வழங்கி வருகின்ற மிகப் பெரிய குளமாகிய இரணைமடுக் குளத்தின் கொள்ளளவு 34 கனஅடியாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் இக் குளத்தின் நீர்மட்டம் 29 கன அடியாகவுள்ளது.

இதனால் இக்குளத்திற்கு நீர் வரத்து அதிகரிக்குமாயின் வான் கதவுகள் திறந்து விடப்படுமென நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அங்குள்ள குளங்கள் அதன் நீர்க் கொள்ளளவினை அண்மித்துள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய கல்மடுக்குளம் 22.05 கன அடியாகவும் கனகாம்பிகைக்குளம் 10 கனஅடியாகவும் வன்னேரிக்குளம் 9.7 கன அடியாகவும் முறிப்புக்குளம் 12.5 கன அடியாகவும் குடமுறுட்டிக்குளம் 8.4 கன அடியாகவும் அக்கராயன்குளம் 17.11 கன அடியாகவும் காணப்படுகின்றன.

இதனால் இனி வரும் காலங்களில் மழை வீழ்ச்சி அதிகரிக்குமாயின் இக் குளங்கள் வான் பாயலாமென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மாற்று வலுவுடையோர் தினம் நாளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் சர்வதேச மாற்று வலுவுடையோர் தினம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவனத் தலைவர் ச.மோகனபவன் தலைமையில் நடைபெறும்.

ஏற்கனவே இத் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினர் சமூக அமைச்சின் நிதியுதவியில் மாற்று வலுவுடையோருக்கான தையல் பயிற்சி, கையடக்கத் தொலைபேசி திருத்துதல், போன்ற பயிற்சி நெறிகளை நடத்தி வருகின்றனர்.

இம் மாணவர்களுக்கான நிகழ்வே நடைபெறவுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-2-277)

## தமிழர்களுக்கே உரித்தான கலைகளை அழிவிலிருந்து மீட்போம்-ஆனந்தன் எம்.பி

(குருமன்காடு)

எதிர்கால வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கல்வியை எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களுக்கு கற்பிக்கின்றோமோ, அதேயளவு முக்கியத்துவம் கொடுத்து எமது பாரம்பரிய கலைகளையும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும் என த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பண்டாரிக்குளம் "தந்தை செல்வா" பாலர் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலை விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கால வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கல்வியை எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களுக்கு கற்பிக்கின்றோமோ, அதேயளவு முக்கியத்துவம் கொடுத்து எமது பாரம்பரிய கலைகளையும் மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும்.

இன்று அருகிவரும் எமது பாரம்பரிய கலைகளை இன்றுள்ள இளம் சந்ததியினருக்கு கற்றுக்கொடுப்பதன் மூலம் தமிழர்களுக்கென்றே உரித்தான தனித்துவமான கலைகளும், வரலாறும் அழிவிலிருந்து மீட்கப்படும்.

இன்று கற்றுக்கொடுப்பதை இந்த மாணவர்கள் தலைமுறை தலைமுறையாக கைமாறிக்கொண்டு சென்று வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

ஏனெனில் அலங்காரம், ஒப்பனை, பாவ வெளிப்பாடுகளுடன் இன்று இந்த மழலைகள் அரகேற்றிய கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் அனுபவ முதிர்ச்சி மிக்க கலைஞர்களால் அரங்கேற்றப்பட்டதைப்போன்ற உணர்வை தந்து எம்மை பிரமிக்கச் செய்தன. அந்தளவுக்கு இந்த மழலைகளை பயிற்றுவித்து பழக்கப்படுத்திய ஆசிரியைக்கும், தமது திறமைகள் மூலம் எம்மை அசர வைத்த மழலைகளுக்கும் தனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியை யசோதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கௌரவ விருந்தினர்களாக பண்டாரிக்குளம் கிராம சேவையாளர் திருமதி சுகனித்தா, நகர பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி லோ.சொரூபி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.ராதிகா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ-2-250)




## உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ பரிசோதனை

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் கண்டாவளை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான தொற்றா நோய் தொடர்பான மருத்துவ சிகிச்சை முகாம் அண்மையில் இப்பிரதேச செயலகத் திட்டமிடல் கிளையில் நடைபெற்றது.

இதன்போது குறித்த பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடம் இரத்தம், குருதி அமுக்கம், நீரிழிவு நோய் போன்றவை தொடர்பில் பரிசோதனைகள் வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் அவர்களுக்கு ஆலோசனைகளும் கருத்துரைகளும் வழங்கப்பட்டன. (அ-2-263)

## முற்றியது முரண்பாடு- வர்த்தக சங்கத்தினர் வெளிநடப்பு

(மன்னார்)

பண்டிகைக்கால தெருவோர வியாபாரத்தை நடத்த அனுமதி வழங்குவது தொடர்பான அவசர கலந்துரையாடல் அண்மையில் மன்னார் நகர சபையில் இடம் பெற்ற போது அங்கு ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக கலந்துரையாடல் இடை நிறுத்தப்பட்டது.

பண்டிகைக்கால தெருவோர வியாபாரத்தை நிறுத்தக்கோரி மன்னார் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் வர்த்தகர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு பேரணி ஒன்றை கடந்த 2 ஆம் திகதி மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்தின் தலைமையில் மன்னார் வர்த்தக சங்க பிரதிநிதிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது வர்த்தக சங்க பிரதிநிதிகள், மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட், நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர்களான இ.குமரேஸ், எஸ்.பிருந்தாவனநாதன், என்.நகுசீன், நகரசபை பணியாளர்கள் மற்றும் மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம், மீனவ சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

ஏற்கனவே மன்னார் நகர சபையின் இறுதி கூட்டத்தில் மக்களின் நலன் கருதியும், மன்னாரில் உள்ள நிரந்தர வர்த்தகர்களின் நலன் கருதியும் பண்டிகைக்கால தெருவோர வியாபார நடவடிக்கைகளின் கால எல்லையை மட்டுப்படுத்தி எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையிலான 10 தினங்களுக்கு குறித்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மன்னார் வர்த்தக சங்க பிரதிநிதிகளும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இணைந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதன்போது காலந்து கொண்ட பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் மன்னார் மக்களின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு தெருவோர வியாபார நடவடிக்கைகள் கட்டாயம் இடம்பெற வேண்டும் எனவும் 10 நாட்களுக்கும் அதிகமான நாட்கள் வேண்டும் எனவும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இக்கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த வர்த்தக சங்க பிரதிநிதிகள் நீண்ட நேர வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் திடீரென வர்த்தக சங்க பிரதிநிதிகள் கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்தில் இருந்து வெளியேறிச் சென்றனர்.

இதனால் அங்கு கலந்து கொண்ட பொது அமைப்புக்களின் கருத்துக்கள் பெறப்பட்ட நிலையில் கலந்துரையாடல் நிறைவு பெற்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிவன் கோவிலின் மீது தான் தாஜ்மஹால் கட்டப்பட்டுள்ளது

## உ.பி மாநில பா.ஜ.க. தலைவரின் சர்ச்சை பேச்சு


சிவன் கோவில் மீது தான் தாஜ்மஹால் கட்டப்பட்டதாக உத்திரப்பிரதேச மாநில பா.ஜ.க. தலைவரின் பேச்சு புதிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் பாபர் மசூதி கட்டப்பட்டதாகக் கூறி பின்னர் அது சேதப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஆக்ராவில் உள்ள உலக அதிசங்களில் ஒன்றான தாஜ்மஹால் சிவன் கோவில் ஒன்றின் மீது கட்டப்பட்டதாக உத்தரப்பிரதேச மாநில பா.ஜ.க. தலைவர் லக்ஷ்மி காந்த் பாஜ்பாய் தெரிவித்தார்.

பஹாரிச் என்ற இடத்தில் பேரணி ஒன்றில் பேசிய அவர், ஆக்ராவில் தேஜோ மெஹாலயா என்ற சிவன் கோவில் மீது தாஜ்மஹாலை மெஹலாய மன்னர் ஷாஜகான் எழுப்பி உளளதாக தெரிவித்தார். இது தொடர்பாக ஆவணங்கள் தம்மிடம் இருப்பதாக அவர் தெரிவித்தார். பாஜ்பா யின இந்த பேச்சுக்கு இஸ்லாமிய அமைப்புகள கண்டனம் தெரிவிததுள்ளன.

தாஜ்மஹாலை உத்தரப்பிரதேச வக்புவாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று அம்மாநில அமைச்சர் அசம் கான் வலியுறுத்தியது பெரும் சர்ச்சையை உருவாக்கிய நிலையில் சவன் கோவில் மீது தாஜ்மஹால கடடப்பட்டு இருப்பதாக கூறப்படுவது புதிய பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)




# இலங்கையுடன் நிரந்தர தீர்வுக்காக இணைவதை தவிர்க்க முடியாதாம்



## முரளிதரராவ் தெரிவிப்பு

**தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்வதற்காக இலங்கையுடன் இணைந்து செயற்படுவதை தவிர்க்க முடியாது என்று பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது. பாரதிய ஜனதா கட்சியின் செயலாளர் முரளிதரராவ் இந்தக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.**

தமிழக மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் புதுடில்லியில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமர்வு ஒன்றில் பேசிய முரளிதரராவ், மோடியின் அரசாங்கம் இலங்கையுடன் உறவை கொண்டிருக்காது போனால், எவ்வாறு தமிழக மீனவர்களை காப்பாற்ற முடியும் என்று கேள்வி எழுப்பினார். சீனா, பாக்கு நீரிணையில் ஏற்கனவே காலூன்றி உள்ளது. அத்துடன் இலங்கையில் அது பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.


இந்தநிலையில் சீனாவின் ஆதிக்கத்தை தடுக்க இந்தியா, இலங்கையுடன் உறவை கொண்டிருப்பது அவசியம் என்று முரளிதரராவ் தெரிவித்தார். தமிழகத்தில் தற்போதுள்ள அரசாங்கம், பொம்மை அரசாங்கம். இது தன்னியக்க கருவியின தூரத்தில் இருந்து இயககப்படுகிறது. அதேபோல முன்னாள் முதல்வர் கருணாநிதி, ஆட்சிக்கு வந்தால தமது குடும்பத்தினரின் ஊழல் தொடர்பிலேயே சிந்திக்க முடியும் என்றும் முரளிதரராவ் கொஞ்சம் உண்மைகளையும் சுட்டிக் காட்டினார்.

இந்தநிகழ்வில் உரையாற்றிய மத்திய இணை அமைச்சர் பொன் இராதாகிருஸ்ணன், இலங்கை ஜனாதிபதி யமன் என்றால் மோடி அவருக்கு யமன் என்று குறிப்பிட்டார். ராஜபக்ஷ என்ற யமன், யமனின் மாஸ்டரான சிவனை பற்றி அறிந்து வைதிருக்கிறார் எனவே தான் மோடி கேட்டமைக்கு இணங்க இலங்கையில் மரண தண்டனை பெற்ற ஐந்து தமிழக மீனவர்களையும் விடுவிக்க ராஜபக்ஷ உடன்பட்டார் என்று இராதாகிருஸ்ணன் குறிப்பிட்டார். இந்தநிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றார். (இ-5)




# ஜூன் - 21 உலக யோகா தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவிக்கும்

## சுஷ்மா தகவல்



பிரதமர் நரேந்திர மோடி அளித்த யோசனையை ஏற்று ஜூன் 21ஆம் திகதியை உலக யோகா தினமாக ஐக்கிய நாடுகள் சபை விரைவில் அறிவிக்கவுள்ளது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறியதாவது, உலக யோகா தினத்தை அறிவிக்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்துக்கு மோடி கோரிக்கை விடுத்தார். அவரின் இக்கோரிக்கைக்கு 170 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. மோடியின் கோரிக்கை ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து ஜூன் 21ஆம் திகதியை உலக யோகா தினமாக அறிவிக்க ஐக்கிய நாடுகள் சபை முடிவு செய்துள்ளது. இதற்கான அறிவிப்பு இன்னும் 4 நாட்களில் வெளியாக உள்ளது. உடல் நலத்தையும் மன நலத்தையும் பெற யோகாசனங்கள் உதவுகின்றன. இவ்வாறு சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

கடந்த செப்டெம்பர் மாதம் ஐககிய நாடுகள் பொது சபையில் உரையாற்றிய பிரதமர் மோடி, உலக யோகா தினத்தை அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். அவரின் இக்கோரிக்கைக்கு அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்தன. கடந்த மாதம் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ஹெர்மன் வான் ராம்பயும், இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்திருந்தார்.

யோகாவுக்கு மோடி தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. சமீபத்தில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தின் போது, யோகாசனம், பாரம்பரிய மருத்துவத்துக்கென தனியாக ஒரு அமைச்சரவையை 'ஆயுஷ்' என்ற பெயரில் மோடி உருவாக் கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இந்தியாவின் கறுப்புப் பண விவகாரத்தில் திருட்டு தகவல்களை நாம் ஏற்கமாட்டோம்

## சுவிட்சர்லாந்து திட்டவட்டம்

(சென்னை)

கறுப்புப் பண விவகாரத்தில் திருட்டு தகவல்களை ஆதாரமாக ஏற்கமாட்டோம் என்று சுவிட்சர்லாந்து அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. சுவிட்சர்லாந்தில் உள்ள எச்.எஸ்.பி.சி.வங்கி முன்னாள் ஊழியர் ஹெர்வி பால்சியானி ஒரு இலட்சத்து30ஆயிரம் வாடிக்கையாளரகளின் கணக்கு விபரங்களை பிரான்ஸ் அரசிடம் 2008ஆம் ஆண்டில் அளித்தார்.

கறுப்புப்பண பதுக்கல்காரர்கள் அடங்கிய அந்த பட்டியலை இந்தியாவிடம் பிரான்ஸ் அரசு அளித்துள்ளது. ஆனால் அந்த வங்கிக் கணக்கு விபரங்கள் சட்டவிரோதமாக திருடப்பட்டவை, அவற்றை ஆதாரமாக ஏற்க முடியாது என்று சுவிட்சர்லாந்து அரசு கூறிவருகிறது.

இந்தியாவுக்கான சுவிட்சர்லாந்து தூதர் லினஸ் வான்காஸ்டில்மூர் இதனை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். விப்ரோ நிறுவனத் தலைவர் அசிம் பிரேம்ஜியின் தலைமைப் பண்பை பாராட்டும் வகையில் சுவிட்சர்லாந்து அரசு சார்பில் சிறப்பு விருது அறிவிக்கப்பட்டது. இதையொட்டி மும்பையில் நடந்த விழாவில் அசிம் பிரேம்ஜிக்கு சுவிட்சர்லாந்து தூதர் லினஸ் விருதினை வழங்கி கௌரவித்தார்.

அப்போது பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு லினஸ் அளித்த பேட்டியில் கூறியதாவது,

பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோர் சுவிட்சர்லாந்து வங்கிகளில் பணத்தை முதலீடு செய்துள்ளனர். எங்கள் நாட்டு சட்டப்படி அந்த விபரங்களை வெளியிடமுடியாது. கருப்புப்பண விவகாரத்தில் இந்தியா வின் நிலையை நாங்கள் புரிந்து கொணடுள்ளோம். இது தொடர்பான விசாரணையில் இந்தியாவுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க சுவிட்சர்லாந்து அரசு தயாராக உள்ளது. ஆனால் திருடப்பட்ட தகவல்களை ஆதாரமாக ஏற்க முடியாது.

இந்தியாவில் வரிஏய்ப்பு செய்து சுவிட்சர்லாந்து வங்கிகளில் பணம் முதலீடு செய்யப்பட்டிருப்பது குறித்து உண்மையான ஆதாரங்களை சமர்ப்பித்தால் சம்பந்தப்பட்ட வங்கிக கணக்கு விபரங்களை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இனிவரும் காலங்களில் சுவிட்சர்லாந்து வங்கிகளில் முதலீடு செய்யும் இந்தியர்கள், ஜேர்மானியர்கள், அமெரிக்கர்களின் வங்கிக் கணக்கு விபரங்கள் சம்பந்தப்பட்ட நாடுகளின் வருமான வரித் துறை அதிகாரிகளிடம் அளிக்கப்படும. ஆனால் கடந்த 50 ஆண்டு கால வங்கிக் கணக்கு விபரங்களை அளிக்க முடியாது, என அவர் மேலும் தெரிவிததார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் மத்திய அரசின் நெருக்கமே விலகக் காரணம்

## வைகோ விளக்கம்

**(கொழும்பு)**

**இலங்கை அரசுடன் இந்திய மத்திய அரசு தொடர்ந்து நெருக்கம் பேணி வருவதைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வைகோ தலைமையிலான ம.தி.மு.க நேற்று விலகியுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**



இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இந்தியாவில்பா.ஜ.க.தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. விலகுவதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பான முடிவு நேற்று வைகோ தலைமையில் சென்னையில் நடைபெற்ற ம.தி.மு.க உயர்நிலைக் குழு கூட்டத்தில் எடுக்கப் பட்டது. வைகோ தனது அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்திலும் விலகல் அறிவிப்பை பகிர்ந்துள்ளார்.

### விலகல் ஏன்?


கூட்டணியில் இருந்து விலகுவது தொடர்பான, இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில், முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், மூத்த தலைவர் எல்.கே. அத்வானி ஆகியோர் தேசிய ஜனநாயக கூட்டணியை வழிநடத்திச் சென்ற போது தோழமைக் கட்சிகளுடன் கடைபிடிக்கப்பட்டு வந்த அணுகுமுறையின் அடையாளம் எதுவும் நரேந்திர மோடி அரசில் இல்லை.

எனவே, நடந்து முடிந்த 2014 நாடாளுமன்றத் தேர்தலில், பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்றிருந்த ம.தி.மு.க இனியும் பாரதிய ஜனதா கூட்டணியின் உடன்பாட்டையோ,உறவையோ தொடர முடியாது என்பதால், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகிக் கொள்வது என இக்கூட்டம் தீர்மானிக்கின்றது என்று ம.தி.மு.க குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசுடனான நெருக்கம், மீனவர் பிரச்சினையில் மெத்தனம், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, காவிரியில் குறுக்கே அணை கட்டும் கர்நாடக அரசின் முடிவு ஆகிய விவகாரங்களில் தமிழகத்திற்கு விரோதமான முடிவுகளை எடுப்பது, தமிழக சட்டப்பேரவை தீர்மானத்தை புறக்கணித்தது, கச்சதீவு விவகாரம் முடிந்துபோன பிரச்சினை என கூறியிருப்பது போன்ற பா.ஜ.க நிலைப்பாடுகளால் அக்கூட்டணியில் இனியும் நீடிக்க முடியாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)







யாழ்.கோவிலாக்கண்டி மேற்கு கந்தையா கனகம்மா நிதிய தமிழகராதி நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் அண்ணா தொழிலக முதல்வர் சி.பொ.நடராசா மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி தி.வேல்நம்பி இலவசமாக நூலை மாணவர்களுக்கு வழங்குவதையும் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணமூர்த்தி நூலை வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் 36பேர் டிசெம்பர் 26இல் வருகை



ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பதற்காக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் 36 பேர், டிசெம்பர் 26ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான "பவ்ரல்" தெரிவித்துள்ளது.

ஆசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பை சேர்ந்த 36 பேரை இலங்கைக்கு அழைப்பதற்கு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அனுமதியளித்துள்ளார் என்றும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் உட்பட 10 நாடுகளை சேர்ந்த இந்த குழுவினர் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் சிறந்த அனுபவத்தை கொண்டவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வேளையிலும், தேர்தலுக்கு பின்னரும் இவர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் செல்லவுள்ளனர். இதேவேளை பவ்ரல் தன்னுடைய கண்காணிப்பாளர்கள் [illegible] பணியில் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

# கழிவு ஒயில் பிரச்சினைக்கு தீர்வுகாண உதவவேண்டும்

## இந்தியாவிடம் மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் கழிவு எண்ணெய் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா உதவ வேண்டுமெனவடமாகாணசபையில் உறுப்பினர் பா.கஜதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மாகாணசபை அமர்வின் போது சுன்னாகம் அனல் மின்நிலையத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கோ அல்லது வடக்கில் புதிதாக வேறு அனல் மின்நிலையங்க [illegible] மத்திய [illegible] அதிகாரசபை அனுமதி வழங்கக்கூடாது என வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வடக்கு மாகாணசபையில் சமர்ப்பித்த பிரேரணையினை வழிமொழிந்து உரையாற்றிய போதே வடமாகாணசபை உறுப்பினர் இவ்வாறு வேண்டுகோள் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பிரச்சினையின் தீவிரத்தைத்தணிப்பதற்கு உதவுவதாக அண்மையில் எமது வடக்கு முதல்வரைச்சந்தித்த ஜப்பான் தூதுவர் உறுதியளித்திருந்தார்.

ஆயினும் இங்கு சமூகமளித்துள்ள இந்திய பிரதித் தூதுவரிடம் எமது மக்கள் சார்பாக உருக்கமான ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன். அதி நவீன தொழில்நுட்பங்கள், தொழில்நுட்பகருவிகளைக் கொண்டுள்ள இந்தியா இவ்விடயத்தில் தலையிட்டு தனது உதவியின் மூலம் நிலைமையைச்சீரமைத்து எமது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தர உதவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பகவத்கீதைக்கு பதிலாக திருக்குறளை அறிவிக்க வேண்டும்

## ராமதாஸ் கோரிக்கை

இந்துக்களின் புனித நூலாக கருதப்படும் பகவத் கீதை இந்தியாவின் தேசிய நூலாக அறிவிக்கப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும், வெளியுறவு அமைச்சருமான சுஷ்மா சுவராஜ் கூறியிருக்கிறார்.

ஒரு தரப்பு மக்களின் விருப்பத்தை ஒட்டுமொத்த இந்தியா மீதும் திணிக்கும் நோக்குடனான சுஷ்மா சுவராஜின் இந்தக் கருத்து கடுமையாக கண்டிக்கத்தக்கது என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், கீதையுடன் ஒப்பிடும் போது திருக்குறளில் ஏராளமான முற்போக்குக் கருத்துகள் உள்ளன. கல்வி, சுகாதாரம், மனிதநேயம், உணவு முறை, தாய் அன்பு, போர், 'பெரியோரை மதித்தல், ஆட்சி முறை, எதிர்க் கட்சிகளுக்கான இலக்கணம் என திருக்குறளில் இல்லாதது எதுவுமே இல்லை என்னும் அளவுக்கு மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் உள்ளன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பகுத்தறிவையும் போதித்த திருக்குறளுக்கு மட்டுமே இந்தியாவின் தேசிய நூலாக அறிவிக்கப்படும் தகுதி உள்ளது.

மொழித்திணிப்பையும், கலாசாரத் திணிப்பையும் தமிழகம் மட்டும் தான் கடுமையாக எதிர்க்கிறது என்பதால் ஒரு புறம் திருவள்ளுவரின் பிறந்த நாள் வட இந்திய பாடசாலைகளில் கொண்டாடப்படும் என்று அறிவித்து விட்டு, அதற்கான கொண்டாட்டங்களில் தமிழ்நாட்டு மக்கள் ஈடுபட்டிருக்கும் போது கீதையை தேசிய நூலாக அறிவிக்கத் துடிப்பது மோசடி அரசியலாகவே பார்க்கப்படும்.

எனவே, கீதையை தேசிய நூலாக அறிவிப்பதை கைவிட்டு திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ராமதாஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-5)



தெல்லிப்பழை பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆக்கத்திறன் அரங்கப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற போது பயிற்சிப்பட்டறை நிகழ்வினையும் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# மோடிக்கு கருணாநிதி எச்சரிக்கை

தேசிய புனித நூலாக பகவத் கீதை அறிவிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பேச்சை தி.மு.க. கடுமையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ள கருணாநிதி, இதுபோல் மக்களிடையே கிளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் நடப்பது, வளர்ச்சிப் பணிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று பிரதமர மோடிக்கு எச்சரித்துள்ளார்.

பகவத் கீதை தேசிய நூலாக அறிவிக்கப்படும் என்ற வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜின் கருத்தை சுட்டிக் காட்டி, தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மத்திய அரசில் பா.ஜ.க. பொறுப்பேற்றதற்குப் பிறகு, சமூக வலைத் தளங்களில் கட்டாயம் இந்தி என்று தொடங்கி, குரு உத்சவ் என்று விழா எடுத்து, பாட மொழியாக சமஸ்கிருதம் என்று அறிவித்து, இந்தியா இந்துக்கள் தேசமே என்ற பேச்சுகளுக்கெல்லாம் இடம் கொடுத்து, மத்திய அமைச்சர் ஒருவரே அவசரப்பட்டு சர்ச்சைக்குரிய கருத்தினைத் தெரிவித்து, அதற்காக பிரதமரே வருத்தம் கலந்த தொனியில் சமாதானம் செய்து பதில் கூறுகின்ற அளவுக்கு நிலைமை மாறி, இப்போது அடுத்த கட்டமாக பகவத் கீதை தேசிய புனித நூலாக அறிவிக்கப்படுவதாகவுள்ளது என்றும், அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து வருவதாகவும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் சர்ச்சைக்குரிய கருத்தினைத் தெரிவித்து, மீண்டும் ஒரு வம்பை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்.

இந்தியாவில் இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறித்தவ மதம் சீக்கிய மதம், ஜைன மதம் போன்ற பல் வேறு மதங்கள் இருந்தாலும், அனைத்து மதங்களையும் சமமாகப் பாவித்து மதச் சார்பற்ற தன்மையைக் கடைபிடிக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் அடிப்படை கோட்பாடாக இருந்திட வேண்டும்.

பிரதமர் நரேந்திர மோடி சர்ச்சைக்குரிய இப்படிப்பட்ட கருத்துகளை ஒவ்வொரு வரும எழுப்பி மக்களிடையே கிளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் நடந்து வளர்ச்சிப் பணிக்குக் குந்தகம் ஏற்படுத்தாதவாறு மிகுந்த எச்சரிக்கையோடு மத்திய அரசை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று வலியுறுத்துவதோடு, தேசிய புனித நூலாக பகவத் கீதை அறிவிக்கப்படும் என்ற வெளியுறவுத் துறை அமைச்சரின் பேச்சுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கருணாநிதி மேலும்தெரிவித்துள்ளார் (இ-5)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி மகாலிங்கம் (ராசாத்தி)



யாழ். சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி மகாலிங்கம் அவர்கள் 06-12-2014 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கம்(மனேச்சர்) அவர்களின் அன்பு மனைவியும், முரளிதரன்(லண்டன்), காலஞ்சென்ற சாருகாசினி, சிறிதரன் (பிரான்ஸ்), ஜெயந்தன் (பிரான்ஸ்), சுபாசினி(இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தேவராசா, ஜீவராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலவிஜிதா (லண்டன்), தவராசா (ஜேர்மனி), யபிதா (பிரான்ஸ்), ஜெயந்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்த்திகா, கிஷாந், சாருகா, சர்வினா, சுதர்சா, ஆஞ்சனா, நிரோஜன், வினோபா, விஜிதசங்கர், துளசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கீர்த்தனன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 09-12-2014 இன்று செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு சண்டிலிப்பாயில் நடைபெற்று, பின்னர் கொட்டுப்பனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**சகோதரர்:- சோதிவடிவேல்**
**இரட்டையபுலம், வைரவர் கோயிலடி,**
**சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். 077 7953 840**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமுடுக்குச் சேவகன் மலம்முடுக்கிச் செத்தானாம்

– தமிழ்ப்பழமொழி

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## பன்முகப்படுத்தப்பட்ட வ.செ.திட்ட நிதி ஒதுக்கீடு படும்பாடு

சுடுகுது மடியைப்பிடி என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு. அவசரம், அந்தரம், பதற்றம் என்பவற்றின் பரிதவிப்பை விளங்கப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டதே இதுவாகும்.

இந்தப் பழமொழிக்குப் பொருந்தமாக பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டை குறிப்பிட லாம்.

பாராளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாடசாலைகள், பொது அமைப்புகள், ஆலயங்கள் என்பவற்றிற்கு நிதி ஒதுக் கப்படுவது வழக்கம்.

இப்போது வடக்கில் மாகாண அரசு அமைக்கப்பட்ட பின்னர் மாகாணசபை உறுப்பினர்களின் நிதி ஒதுக் கீடும் இடம்பெற்று வருகிறது.

ஏனினும் நிதி ஒதுக்கீட்டில் மிகமோசமான காலதா மதம் ஏற்படுவது குறித்து எவரும் அதிருப்தி தெரிவிக் காமல் இருப்பது ஏன்? எனத் தெரியவில்லை.

நவம்பர் மாத இறுதியில் அல்லது டிசம்பர் மாதத் தொடக்கத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அறிவி த்து விட்டு, வேலையைத் துரிதப்படுத்துமாறு கொடுக்கப் படும் தொந்தரவு; குறித்த வேலைத் திட்டத்தை பலவீனப் படுத்துகிறது. ஏதோ வேலை செய்து கணக்கு முடித்து விட்டால் போதும் என்பது வேலைத்திட்டத்தை முன் னெடுக்க வேண்டியவர்களின் நினைப்பாக இருக்கிறது.

நவம்பர், டிசம்பர் மாத காலப் பகுதி மழைகாலம் என்ப துடன் சில இடங்கள் வெள்ளமும் வெள்ளக்காடாகவும் உள்ளன. மழை பெய்யப்பெய்ய கட்டப்படும் கட்டடத்தின் நிலைமை எப்படியிருக்குமென்பதை ஒருகணம் அரச உயரதிகாரிகள் உணரவேண்டும்.

திணைக்களத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுப் பதன் மூலம் வேலைத்திட்டத்தை செய்து முடிக்கலாம் என நினைப்பது யதார்த்தத்தை உணராதநிலைமை என்பதைக் கூறித்தானாகவேண்டும்.

ஏகப்பட்ட பாடசாலைகள், முன்பள்ளிகள், ஆலயங் கள், சமூக அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் போது அதற்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோ கத்தர்களையும் வழங்க வேண்டும்.

இதை விடுத்து ஒருசில தொழில்நுட்ப உத்தியோக த்தர்களைக் கொண்டு முழு வேலைத்திட்டத்தையும் பார்வையிடச் செய்வதென்பது மிகப்பெரிய வேலைப் பளுவை பொறுப்பிப்பதாகும்.

எனவே, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத் தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் செய்யப்படும் வேலைத் திட்டங்களுக்கு உரிய அவகாசம் கொடுக்கப்பட வேண் டும். சடுதியாகச் செய்யுங்கள் என்ற உத்தரவு, செய்யப் படும் வேலையை பழுதாக்கி விடும். ஆகையால் தற் போது வட மாகாணத்தில் நிலவக்கூடிய கால நிலை யையும் நிதி ஒதுக்கப்பட்ட காலத்தையும் கருத்தில் கொண்டு வேலைத்திட்டத்தை செய்து முடிப்பதற்கு கால அவகாசம் கொடுக்கப்படுவது நியாயமானதாகும். இது தொடர்பில் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என நம்பலாம்.

இது தவிர பாடசாலைகள், முன்பள்ளிகள், பொது அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் போது ஒரு தெளிவான கொள்கையை பின்பற்றுவது கட்டாயமா னதாகும்.

ஒரு பொது அமைப்புக்கு பாராளுமன்ற உறுப்பின ரின் நிதியும் மாகாணசபை உறுப்பினரின் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட, இன்னொரு பொது அமைப்புக்கு எந்த நிதியும் கிடைக்காமல் போகிறது.

எனவே அரசியல் செல்வாக்கு என்பதை உடைத்தெ றிந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் நிதி கிடைக்கும் பொது அமைப்புக்கு மாகாணசபை உறுப்பினரின் நிதி கிடைக்க முடியாது என்ற நிபந்த னையையும் பாராளுமன்ற உறுப்பினர் அல்லது மாகா ண சபை உறுப்பினர்களில் ஒருவரின் நிதி ஒதுக்கீட்டை (இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது) மட்டுமே ஒரு பொது நிறுவனம் பெற முடியும் என்ற நிபந்தனையையும் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறான நிபந்தனைகள் வேலைத்திட்டங் களை உரிய காலத்திலும் – காத்திரமாகவும் செய்து முடிப்பதற்கு உறுதுணையாக அமையும்.

## ராஜிவ் கொலை வழக்கு

# கே.பியிடம் தகவல்களை பெற இன்டர்போலை நாடும் சி.பி.ஐ

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை தொடர்பான தகவல்களை விடுதலைப் புலிகளின் ஆயுத விநியோகஸ்தராக செயற்பட்டு வந்த குமரன் பத்மநாதனிடமிருந்து பெற்றுத்தருமாறு சி.பி.ஐ. இன்டர்போலி டம் கோரிக்கை விடுத்துள்ளது.

ராஜிவ் கொலை வழக்கு பல வருடங் களாக இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் இலங்கையிடமிருந்து அனை த்து தகவல்களையும் பெற்றுவிட்டால் அந்த வழக்கை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று சி.பி.ஐ சுட்டிக்காட்டியு ள்ளது.

2009ஆம் ஆண்டு மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்ட கே.பி இல ங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந் தார்.

2012ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட இவர் தொடர்ந்தும் அர சின் பாதுகாப்புடன் கிளிநொச்சியில் சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகிறார்.

இந்தநிலையில் ராஜிவ் கொலை தொடர்பில் குமரன் பத்மநாதனின் தொடர்பு குறித்து தகவல்களை பெற்று த்தருமாறு இலங்கையிடம் சி.பி.ஐ பல முறை கோரிக்கை விடுத்தது.

எனினும் குறித்த விசாரணை இடம்பெறவில்லை. இதனையடுத்தே தற்போது இன்டர்போலிடம் உதவியை நாடியுள்ளதாக சி.பி.ஐ குறிப்பிட்டுள் ளது.



ஏற்கெனவே சர்வதேச கண்காணி ப்பு நிறுவனம் ஒன்று இலங்கைக்கு வந்து உத்தியோகபூர்வமற்ற வகையில் குமரன் பத்மநாதனை விசாரணை செய்தது.

இதன்போது 1991 மே 21இல் இடம் பெற்ற ராஜிவ் காந்தி கொலை தொடர் பில் தமக்கு எவ்வித தகவல்களும் தெரி யாது என்று கே.பி மறுத்திருந்தார்.

இந்தநிலையில் இந்தியாவின் புலனா ய்வுபிரிவானறோமற்றும்ஜிஎன்பனராஜிவ காந்தி கொலை வழக்கு தொடர்பில் விசார ணைகளை முடிக்க இன்னும் ஒருவருட கால அவகாசத்தை மீண்டும் பெற்றுக் கொண்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-11)

# பொது எதிரணிக்கு ஹிருணிகா ஆதரவு!

(கொழும்பு)

என் தந்தையைக் கொன்றவர்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள், ஜனாதி பதியுடன் முக்கிய நிகழ்வுகளில் கூட கல ந்து கொள்கிறார்கள்.

இதுவெல்லாம் ஏன் நடக்கிறது? எப்படி நடக்கிறது? என்பதை நினைக்க ஆச்சரிய மாக உள்ளது என தெரிவித்துள்ளார் மேல மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர. மூன்று வருடங்களாகியும எனக்கு நீதி கிடைக்கவில்லை. ஆனாலும் ஒழுங்கான தலைமைத்துவம் ஒன்றில் லாததால் நான் பொறுமையுடன் காத்தி ருந்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அதற்கான சூழ்நிலை உருவாகியிருப்பதால் நான் பொது வேட் பாளரைப் பலப்படுத்தி அவரது வெற்றிக் காக உழைக்க முடிவெடுத்திருக்கிறேன் என தெரிவித்துள்ள அவர், அரசாங்க த்துக்கு வெளியில் இருந்து வருபவர்க ளுக்கு பதவிகளும் அமைச்சுகளும் முன்னுரிமையுடன் வழங்கப்படுவ தைக் கொண்டு சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் அதிருப் தியில் இருப்பதாகவும் தகவல் வெளி யிட்டுள்ளார்.

நான் ஒரு பெண். என்னுடைய பாதுகாப்பு குறித்து நான் சிந்தித்து செய ற்பட வேண்டும் எனும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் அறிவுரை யையும் மீறியே தான் முடிவெடுத்துள் ளதாகவும் எதற்கும் தான் அஞ்சப் போவதில்லையெனவும் அவர் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஈ.பி.டி.பியின் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரி வித்து யாழ்ப்பாணத்தில் முதலாவது பிர சாரக் கூட்டத்தை ஈ.பி.டி.பி கட்சி ஆரம் பித்துள்ளது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில் நேற்றுக் காலை 10 மணி க்கு பிரசார நடவடிக்கையை நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன் ரின், வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீ ரங்கேஸ்வரன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

முன்னதாக மருதங்கேணி சந்தியி லுள்ள கந்தசுவாமி கோயிலில் தேங் காய் உடைத்து. பிரசார அலுவலகம் ஒன்றும் அப்பகுதியில் திறந்து வைக்க ப்பட்டது.

தொடர்ந்து பட்டாசு வெடிக்க கட்சி ஆதரவாளர்கள் அப்பகுதிகளில் ஜனா திபதி மகிந்தவுக்கு ஆதரவாக பிரசாரப் பணியில் ஈடுபட்டனர். (எ-11)

# இலங்கையுடனான உறவை பலப்படுத்தும் சீனா!

## இந்தியா கவலை

(கொழும்பு)

இலங்கையில் சீனா பாரிய நீர் விநி யோக திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த மென்மையான வலு திட்டத்தின் மூலம் சீனா, இலங்கையுடனான உறவை ஆழமாக்கவுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

சீனாவின் இயந்திர பொறியியல் கூட் டுத்தாபனம், சுமார் 230 மில்லியன் டொலர்கள் செலவில் இந்த திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த நிறுவனம் ஏற்கெனவே 1.2 பில்லியன் செலவிலான நுரைச் சோலை லக்விஜய அனல் மின்சார திட்டத்தில் ஈடுபட்ட நிறுவனமாகும்.

இந்தநிலையில் குறித்த நிறுவனத்தின புதிய நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் கொழும்பின் புறநகர் பகுதிகளில் உள்ள 6இலட்சம் மக்கள் சுத்தமான குடிநீரை பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகி றது.

இந்தத் திட்டத்தின் மூலம் நாளொன் றுக்கு 54ஆயிரம் கியூபிக் நீர் விநியோ கிக்கப்படவுள்ளது.

நீர் விநியோகத்துக்காக சுமார் ஆயி ரம் கிலோ மீற்றர் நீர்க்குழாய்கள் பயன் படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, புதுடில்லியில் உள்ள ஆய்வாளர்கள், சீனா - இலங்கையுட னும், மாலைதீவுடனும் தீவிரமான உறவைப் பேணுவதற்காகவே இவ் வாறான திட்டங்களை முன்னெடுப்ப தாக குறிப்பிட்டுள்ளனர். (எ-11)

JSAC

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16

2014

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

பெண் பிள்ளை கண்டு துவண்டு போகாமல், ஆண்பிள்ளைக்கு நிகராய் ஆதரவு கொடுத்து நல்லதோர் சிந்தனையாளராய் மாறுவோம் இன்றே.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அன்பைக் கொட்டுங்கள்



- நன்மை செய்வோருக்கு கைகொடுக்கத் தயாராக இரு. யாரிடத்திலும் கோபம் கொள்ளாதே. அன்பைக் கொட்டு.
- உலகில் காணும் அனைவரும் உன் உடன் பிறந்த சகோதரர் என்பதை மறந்து விடாதே.
- யாரையும் குறை கூறாதே. புறம் பேசுபவரின் பேச்சுக்கு செவி சாய்க்க மறுத்து விடு.
- ஆர்வமுடன் வேலையில் ஈடுபடு. அதே சமயம் அதில் உன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதே.
- மனம் கீழ்நோக்கிச் செல்லும் இயல்புடையது. அதை எப்போதும் உன் கட்டுக்குள் வைத்திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய உதைபந்து அணியில் யாழ். வீராங்கனைகள் தெரிவு



இலங்கை தேசிய 15 வயது பெண்கள் உதைபந்தாட்ட அணிக்கு வீராங்கனைகளை தெரிவு செய்வதற்கான பயிற்சிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 5 பேர் தெரிவாகியுள்ளனர்.

இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனம் நடத்திய 15 வயதுப் பிரிவு பெண்கள் பாடசாலை அணிகளுக்கிடையிலான சமபோஷ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் களுத்துறை பொது விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

இப் போட்டிகளில் 3ஆம் இடத்தினை பெற்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் 5 வீராங்கனைகளே இவ்வாறு தெரிவாகியுள்ளனர்,

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் திலக்ஷி, சரண்ஜா, சுரேக்கா, கௌரி, சானு ஆகியோரே இவ் இலங்கை தேசிய 15 வயது பெண்கள் உதைபந்தாட்ட அணிக்கு வீராங்கனைகளை தெரிவு செய்வதற்கான பயிற்சிக்கு தெரிவாகியுள்ளன்ர். (க-23)

விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

சிறகுகள் அமைப்பால் கிரிக்கெட் சுற்றுப் போட்டி யொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அணிக்கு 7 பேர் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக இது இடம்பெறவுள்ளது. இம் மாத இறுதிப் பகுதியில் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. போட்டிகள் உரும்பிராய் இந்து மைதானத்தில் இடம் பெறும்.

பங்குபற்ற விரும்பும் அணிகள் 0778694095/ 077971 7694 ஆகிய இலக் கங்களுடாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டா ளர்கள் கேட்டுள்ளனர். (க-23)

## உதைபந்தாட்ட போட்டி முடிவு

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம்2014ஆம்ஆண்டுக்கான காகில்ஸ் வெற்றிக் கிண்ணத்திற்கான உதை பந்தாட்டப் போட்டிகளை நடத்தவுள்ளது. இதில் வடமராட்சி லீக் அணிகளுக்கான தெரிவுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இதில், இடம் பெற்ற போட்டி களின படி பொம்மர்ஸ் விளையாடுக கழகமும் நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 6:0 என்னும் கோல் கணக்கில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

கரவை சுடர் விளையாட்டுக் கழகமும் கலட்டி யுனைட்டட் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 4:0 என்னும் கோல் கணக்கில் கரவை. சுடர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. ,(க-23)

# சமபோஷ வெற்றிக்கிண்ணம் மகாஜனா மூன்றாமிடம்



இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனம் நடத்திய 15 வயதுப் பிரிவு பெண்கள் பாடசாலை அணிகளுக்கிடையிலான சமபோஷ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 3ஆம் இடத்தைக் கைப்பற்றியது.

தேசிய மட்டத்தில் இடம் பெற்ற போட்டிகள் களுத்துறை பொது விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

இப் போட்டிகளில் 3ஆம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மாதம்பை சென் ஜோசப் கல்லூரியும் மோதியது.

ஆரம்பம் முதலே திலக்ஷியின் ஆட்டம் மூலம் போட்டியை கட்டுக்குள் வைத்திருந்த தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அடுத்தடுத்து கோல்களைபோட்டு அதிர்சியளித்தது.


முதல் பாதியில் திலக்ஷியின் உதவியுடன் 3 கோல்களைப் போட்ட தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி இரண்டாவது பாதியிலும் மேலும் 3 கோல்களைப் போட பதிலுக்கு மாதம்பை சென் ஜோசப் கல்லூரியால் கோல்களை தனையும்பெற முடியவில்லை.

இதனால் இப் போட்டியில் 6:0 என்னும் கோல் கணக்கில் மாதம்பை சென் ஜோசப் கல்லூரியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வென்று தேசிய மட்டத்தில் 3 இடத்தை சுவீகரித்தது.

அணி சார்பில் திலக்ஷி 3 கோல்களையும் கௌரி, சரண்யா, சர்மி ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் போட்டனர். (க-23)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டி கொல்கத்தாவை வென்றது மும்பை






கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் மும்பை வெற்றி பெற்றது.இந்தியன் சுப்பர் லீக் காறபந்து போட்டியில் (ஐ.எஸ். எல்.) நேற்றிமுன் தினம் நடந்த 52 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை சிட்டி எப்.சி.-அட்லெடிகோ டீ கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சையில் இறங்கின.

40 ஆவது நிமிடத்தில் மும்பை வீரர் டிடிகா கோல் அடித்தார். பிறபாதியின் 60 ஆவது நிமிடத்தில கொல் கத்தாவின் பல்ஜித் சைனி பதில் கோல் திருப்பினாா். இதன் பின்னர் 76 ஆவது நிமிடத்தில் மும்பை வீரர் மானுவேல் பிரிட்ரிச் கோல் அடித்து மீண்டும் தங்கள் அணிக்கு முன்னிலையை உருவாக்கினார். கடுமை யாக போராடிய கொல்கத்தா கடைசி நிமிடத்தில் கோல் போட்டது. ஆனால் அது ஓப் சைடு என்று அறிவிக்கப்பட்டதால் தோல்வியை தவிர் க்க முடி யாமல் போய் விட்டது.

முடிவில் மும்பை அணி 2-1 என்ற கோல் கணக்கில் கொல்கத்தாவை வென்றது. மும்பை அணி 15 புள்ளி களுடனும் (4 வெற்றி, 3 சம நிலை, 6 தோல்வி), கொல்கத்தா அணி 18 புள்ளிகளுடனும் (4 வெற்றி, 6 சமநிலை, 3 தோல்வி) உள்ளன.

இன்னும் தலா ஒரு லீக் ஆட்டம் எஞ்சியுள்ள நிலையில் சென்னை (22 புள்ளி), கோவா (21 புள்ளி) ஆகிய அணிகள் மட்டுமே இது வரை அரைஇறுதியை உறுதி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இந்தியாவுக்கு பதிலடி கொடுக்க தயாராக உள்ளோம்-வோட்சன்



அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் இன்று ஆரம்பமாகிறது. இந்த தொடர் குறித்து அவுஸ்திரேலிய சகலதுறை ஆட்டக்காரரான ஷேன் வோட்சன் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் தெரிவித்ததாவது,

நாங்கள் ஆக்ரோஷமாக விளையாடும் போது எங்களது மிகச்சிறந்த ஆட்டம் வெளிப்பட்டு இருக்கிறது. அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடி வரும் காலத்தில் இருந்தே இதை நான் பார்த்து வருகிறேன். இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் போதும் இதேபோன்று தான் குறிப்பாக பந்து வீச்சில் மிகவும் ஆக்ரோஷத்தை காட்டி வெற்றிகளை குவித்தோம். அந்த அணுகுமுறையில் மாற்றம் இருக்கப்போவதில்லை.


இந்தியாவுக்கு எதிராக களத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது எங்களுக்கு தெரியும். கடந்த ஆண்டு நாங்கள் இந்திய மண்ணில் விளையாடிய போது அவர்கள் எங்களை 4-0 என்ற கணக்கில் தோற்கடித்தார்கள். அந்த வலியும் வேதனையும் இன்னும் மனதில் இருக்கிறது. அதற்கு நாங்கள் எங்களது சொந்த மண்ணில் பதிலடி கொடுக்க வேண்டும். அதற்கு தொடரை சிறப்பாக தொடங்க வேண்டியது அவசியம். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும் போது, இந்திய மண்ணில் நாங்கள் அனுபவித்த வலியை அவர்களும் இங்கே உணருவார்கள். அதை நாங்கள் செய்தாக வேண்டும்.

சக வீரர் பிலிப் ஹியூக்சின் மரணத்தை தொடர்ந்து அந்த பாதிப்பில் இருந்து மனரீதியாக நான் மெதுவாகத்தான் மீண்டு வருகிறேன். ஆனால் உடல்ரீதியாக போட்டிக்கு தயாராக இருக்கிறேன. எனது வாழ்க்கையில் சமீபத்திய தினங்கள் மிகவும் கடினமான நாட்கள் என்பதில் சந்தேகமில்லை எனத் தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - அவுஸ்திரேலியா டெஸ்ட் இன்று ஆரம்பம்

## தோனி விளையாடமாட்டார்




இந்திய கிரிக்கெட் அணி 4 டெஸ்ட் மற்றும் 3 நாடுகள் பங்கேற்கும் போட்டி ஆகியவற்றில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியா சென்றுள்ளது.

அவுஸ்திரேலிய வீரர் ஹியூஸ் முதல்தர கிரிக்கெட் போட்டியின்போது பவுன்சர் பந்து தலையில் தாக்கி மரணம் அடைந்ததைத் தொடர்ந்து கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த முதல் டெஸ்ட் தள்ளிவைக்கப்பட்ட நிலையில்,

முதல் டெஸ்ட் போட்டி அடிலெய்டில் இன்று ஆரம்பமாகிறது.

இந்திய அணித் தலைவர் தோனி, கட்டை விரலில் ஏற்பட்ட காயத்தில் இருந்து அவர் இன்னும் முழுமையாக குணமடையாததன் காரணமாக இப் போட்டியில் பங்கேற்கமாட்டார்.

இதனால் விராட் ஹோலி முதல் முறையாக டெஸ்ட் தலைமைப் பொறுப்பேற்றுள்ளார். விர்த்திமான் சகா விக்கெட் காப்பாளராக அணியில் இடம்பெறுவார்.

அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் வேகப் பந்து வீச்சுக்கு ஏற்றவகையில் இருக்கும் என்பதால் இந்த டெஸ்ட் தொடர் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் சவால் நிறைந்ததாக இருக்கும். கடந்த முறை (2011-12) அவுஸ்திரேலிய பயணத்தில் இந்திய அணி தான் மோதிய 4 டெஸ்ட்களிலும் தோற்று வைட்வோஷ் ஆனது.

அதுமாதிரியான நிலை தற்போது அமையாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு பயிற்சி ஆட்டத்திலும் இந்திய வீரர்கள் சிறப்பாக செயல்பட்டமை காரணமாக நம்பிக்கையுடன் டெஸ்ட் தொடரில் களமிறங்கவுள்ளனர்.

பயிற்சி ஆட்டத்தில் முரளி விஜய், சிகார் தவான், தற்காலிக அணித் தலைவர் விராட் ஹோலி, புஜாரா முத்திரை பதித்தார்கள். இதனால் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேகப்பந்தில் வருண் ஆரோன், இஷாந்த் சர்மா, முகமதுஷமி உள்ளனர். சுழற் பந்து வீச்சில் அஸ்வின், கரண்சர்மா ஆகிய இருவர் இடம்பெறலாம்.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை, அணித் தலைவர் கிளார்க் உடல் தகுதி பெற்றதால் இன்றைய டெஸ்டில் இடம்பெறுவார் என்று தெரிகிறது.

வோர்னர், வோட்சன், ரோஜர்ஸ், ஸ்மித், ஹடின் போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும், மிச்சேல் ஜோன்சன், பீட்டர் சிடில்,




ரியான் ஹரிஸ், ஹாஸ்லிவூட் போன்ற சிறந்த பந்துவீச்சாளர்களும் உள்ளனர்.

ஹியூஸ் மரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அணியால் இன்றைய டெஸ்ட்டில் முழுத் திறமையை வெளிப்படுத்த இயலுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

முதல் டெஸ்ட் முதல்நாள் ஆட்டம் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 5.30 மணிக்கு தொடங்குகிறது. ஸ்ரார் கிரிக்கெட் சனலில் இந்த போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (க)

# புதிய மைல்கல்லை எட்டிய சங்கா - ஜெயவர்த்தன




இங்கிலாந்து அணிக்கு எதிரான 4ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி போராடி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து நிர்ணயித்த 266 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை சங்கக்கார, ஜெயவர்த்தனவின் அசத்தலான துடுப்பாட்டத்தினால் வெற்றியிலக்கை 49.4 ஓவர்களில் அடைந்தது.

சங்கக்காரா 86 ஓட்டங்களும், ஜெயவர்த்தனே 44 ஓட்டங்களும் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவியாய் இருந்தனர்.

இந்தப் போட்டியில் 86 ஓட்டங்கள் எடுத்த சங்கக்காரா இந்த ஆண்டு ஆயிரம் ஓட்டங்கள் கடந்த 3ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றார். இவர் இதுவரை 1020 ஓட்டங்களை குவித்துள்ளார்.

ஏற்கெனவே ஹோலி (1054), மத்யூஸ் (1183) ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் 2011 (1127 ஓட்டங்கள்), 2012 (1184), 2013 (1201), 2014 (1020). என தொடர்ந்து 4ஆவது முறையாக ஆயிரம் ஓட்டங்களை கடந்து சங்கக்காரா அசத்தியுள்ளார்.

அதேபோல் ஜெயவர்த்தனவும் அப் போட்டியில் ஒரு புதிய மைல்கல்லை எட்டினார்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக ஒருநாள் போட்டியில் விவ் ரிச்சர்ட்ஸ் (1619), ரிக்கி பொன்ரிங் (1598) ஆகியோரை தொடர்ந்து 1500 ஓட்டங்களுக்கு மேல் கடந்த 3ஆவது வீரர் என்ற பெருமையே அதுவாகும். இவர் மொத்தம் 1527 ஓட்டங்கள் குவித்துள்ளார். (க)

# செல்வாக்கும்...

சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதாக நாம் எமது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடுகின்றோம். அரச ஊடகங்கள் தேர்தல் ஒன்றின் போது நடுநிலையாக செயற்பட வேண்டும். அந்த நிலைமையை மீறிய சந்தர்ப்பத்தையும் தேர்தல் சட்டத்தை மீறிய சந்தர்ப்பத்தையும் இன்று நாம் கண்டு கொண்டோம்.

இந்த சட்டங்களை தேர்தல்கள் செயலகம் முதலில் மீறியுள்ளது. வேட்பு மனுத் தாக்கல் செய்ததன் பின்னர் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் ஒளிபரப்பினை பார்க்கும் பொழுது எம்மால் அறிந்துகொள்ள முடிந்தது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியே வரும் காட்சிகளை காண்பித்தபோதிலும், ஏனைய வேட்பாளர்களுக்கான நியாயம் அரச ஊடகங்களினால் நிலைநாட்டப்படவில்லை. எனவே ஆயுதங்கள் மற்றும் செல்வாக்கிற்கும் மக்களுக்கும்இடையிலான போராட்டமே இந்த தேர்தலாகும்.

இந்த ஊடக சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டார்.

எமது பொதுச் செயலாளர் இராஜினாமா கடிதத்தை வழங்கிய போது நான் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அது குறித்து நான் கவலையடைகின்றேன். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பொதுச் செயலாளர் கபிர் ஹாசிம் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து விடயங்களை தெளிவுபடுத்துவார்.

இந்த நாட்டில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு, போதைப்பொருள் கலாசாரம், கசினோ சூதாட்டம் மற்றும் குடும்ப நிர்வாகம் இதுபோன்ற மிக முக்கியமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொதுச் செயலாளரை பயன்படுத்தி, சமநிலைப்படுத்துவதென்றால், இதுபோன்ற பிரச்சினைகளை தீர்ப்பது எவ்வளவு இலகுவானது என்பதனை சிந்திக்க வேண்டும்.

இதேவேளை, தனது சொத்து விபரம் தொடர்பில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன இதன்போது விளக்கமளித்தார்.

எனது சொத்துக்கள் விபரத்தை இன்று தேர்தல்கள் ஆணையாளரிடம் ஒப்படைத்தேன். அத்தோடு எனது சொத்து விபரத்தை எவரேனும் காணவிரும்பினால் இன்று முதல் அந்த விபரம்எமது அலுவலகத்தில்இருக்கும் எவரேனும கோரிக்கை விடுக்கும்பட்சத்திலே, அதனை பார்வையிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

இது அனைத்து மக்களுக்கும் பொதுவானது. நான் சுகாதார அமைச்சராக பதவி வகித்த போது, 2014ஆம் ஆண்டில் எனக்கு அமைச்சிலிருந்து கிடைத்த 30 ஆயிரம் மில்லியன்எரிபொருள்கூப்பன்கள்என்னிடம்உள்ளன. எனக்கு தேவையான எரிப்பொருளை பயன்படுத்தியதன் பின்னர், எஞ்சிய கூப்பன்களே இவை. நான் சுகாதார அமைச்சின் போக்குவரத்து பிரிவு அதிகாரியொருவரை அழைத்துள்ளேன். இவற்றை பொறுப்பேற்குமாறு கூறியுள்ளேன் என்றார். (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி

## யோகபாக்கியம் பாண்டித்துரை

பிள்ளையார் கோவிலடி மாதகலைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகபாக்கியம் பாண்டித்துரை நேற்று (08.12.2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாதகல் வன்னித்தம்பியுடையார் (அதிபர்) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், மல்லாகம் மலாயன் பென்சனியர் செல்லையா - செல்லமுத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற "சமூகமூர்த்தி, சோபிதஞானி" பாண்டித்துரையின் அன்பு மனைவியும் கஜரதி (ஆசிரியை - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), நிகிந்தா (முகாமைத்துவ உதவியாளர் தொழில்திணைக்களம், கொழும்பு), குகஸ்ரீ, சத்தியசாயிராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மாதகல் வ.கந்தசாமி (ஆசிரியர்), திருமதி த.சிவபாக்கியம் (மாதகல்), திருமதி ந.நேசபாக்கியம் (மாதகல்), காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (அதிபர்), காலஞ்சென்ற திருமதி சி.குணபாக்கியம் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.12.2014 இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாமருதங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


14A,1-ம் ஒழுங்கை,
பட்டாணிச்சூர்,
வவுனியா.

தகவல் :
குடும்பத்தினர்
தொ.பே : 0778379790, 0714412932

(சி-9311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



# அமரர் மு.திருநாவுக்கரசு

(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி. புலவர், விகடகவி, கலாபூஷணம்)

*புத்தகமும் நீயும் புலமைக் கடல் குடைந்து*
*நித்தமுமே நீராடி நீ நடந்த நீரோடை*
*எத்தனையோ எண்ண அலையால் எமை உதைத்து*
*நித்திரையைத் தின்று நின்று நிழலாடுதப்பா!*
*ஓயா உழைப்பு உடலலுப்புப் பாராமல்*
*தாயாய் தவமாய் தந்தையாய் தாத்தாவாய்*
*வாயாரப் புன்னகைத்து வார்த்தைகளால் எமை வருடி*
*சாயாப் பெருவிருட்சமாய் நின்று நிழலளித்தாய்*
*அந்தப் பெருவிருட்சம் அப்படியே சாய்ந்ததுமேன்?*
*நண்பர் குழாம் சுற்றம் நல்லறிஞர் பாவாணர்*
*பண்புடையோர் எல்லோரும் பாராட்ட வாழ்ந்தவனே,*
*சூழ்ந்திருப்போர் எல்லோரும் சுகித்து இரசிக்க நல்ல*
*ஆழ்ந்த கருத்துநிறை நகைச்சுவைகள் நல்குவையே*
*கரவறியா நெஞ்சோடு கலகலவென்றே பேசிப்*
*பரவசத்தைத் தந்திட்ட பண்டிதனே!*
*உன்திறனை,*
*நாடு நகரறியும் நல்லறிஞர் தாமறிவார்*
*பாடும் புலவர் பலரறிவார்; அரசறிந்து*
*பீடுபெறு கலாபூஷணமும் தந்தார்கள்*
*வீடு வெளிச்சதையா! நீ இதனைக் காணவில்லை,*
*எம்மையெல்லாம்*
*வாடி வதங்கவிட்டு ஓர் நொடியில் ஓடிவிட்டாய்!*
*கூடிக்குலாவிக் குதூகலித்த காலமெல்லாம்*
*ஓடி வெறுங்கனவாய் ஒரு கணத்தில் போனதையா!*
*பேச்சழகை உந்தன் பெரும்புலமைச் சாடல்களை*
*ஆச்சரியத்தோடு அமரர் குழாம் கேட்டிருக்க*
*நித்தியமும் நீ இறைவன்*
*நீழலடிக் கீழிருப்பாய்*

அப்பாவின் ஆவி அவ்வுலகு சென்றதென்று
ஆறாத்துயரத்தில் நாம் வருந்தும் வேளையிலே
அன்போடு வந்து ஆறுதல் சொன்னவர்க்கும்,
ஆழ்ந்த அனுதாபம் அறிவித்த அன்பர்க்கும்,
மரணச் சடங்கு தன்னில் கலந்திட்ட நல்லவர்க்கும்,
உதவிகள் பல செய்து உணவு தந்த உத்தமர்க்கும்
பாசமுடன் வந்து பங்களிப்புச் செய்தவர்க்கும்
அன்பு கலந்து அழியா எம் நன்றியினை
நல்ல தமிழ்ப் பண்போடு நாம் நினைவு கூருகின்றோம்.

(8585)

127/7A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

இவ்வண்ணம்:
குடும்பத்தினர்

## 150 கிலோ...

வைத்திருந்தமை தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அவற்றை மீட்ட பொலிஸார், அப்பகுதியில் நின்ற இளைஞர் ஒருவரையும் சந்கேத்தின் பேரில் கைது செய்தனர். குறித்த இளைஞர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் இவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, கஞ்சாவைக் கொள்வனவு செய்வதற்காக வந்திருந்த நால்வர் பருத்தித்துறையில் காத்திருக்கின்றனர் என்ற தகவல் தெரிய வந்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது, திக்கம் பகுதியில் நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் மூவர் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர் என்றும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 8 லட்சம் ரூபாயுக்கு அதிகம் என்றும் மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருகின்றனர் என இரு பிரிவுப் பொலிஸாரும் தெரிவித்தனர். (எ-4,11)

## வேட்புமனுத்...

சேபனைகளையும் நிராகரிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளதாக அறிவித்தார் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமத்.

இந்த இரண்டு ஆட்சேபனைகளும் ஜனாதிபதித் தேர்தல்கள் தொடர்பான சட்ட விதிமுறைகளுடன் எந்தவிதமான தொடர்புகளும் இல்லாத காரணத்தினால் இந்த ஆட்சேபனைகளை நிராகரிப்பதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளதாகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று பகல் 12.00 மணியுடன் முடிவடைந்தது. தேர்தல் ஆணைய தகவல்களின் படி இந்த தேர்தலில் போட்டியிட 17 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் இரண்டு சுயாதீன குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளன.

வேட்புமனு தாக்கல் முடிவடைந்த பிறகு கருத்துக்களை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவை மட்டும் முயன்றால் போதாதென்றும், அரசியல் கட்சிகள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரின் ஒத்துழைப்பும் இதில் தமக்கு தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைளை தவிர்த்துக் கொள்ளுமாறும், ஊடக நிறுவனங்கள் தேர்தல் காலப் பகுதியில் தேர்தல்கள் ஆணையாளர் விடுக்கவுள்ள வழிகாட்டு நெறிகளுக்கு அமைய செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

அரச சொத்துக்கள், அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறிய தேர்தல்கள் ஆணையாளர், அரச அதிகாரிகள் தனது கடமை நேரங்களின்போது எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

பலத்த பாதுகாப்பு மத்தியில் நடைபெற்ற இந்த வேட்புமனு தாக்கல் காரணமாக ராஜகிரிய தேர்தல் செயலகம் அமைந்துள்ள பகுதியில் பிரதான வீதிகள் மூடப்பட்டதுடன் நூற்றுக் கணக்கான அரசியல் கட்சி ஆதரவாளர்கள் சுற்றுப்புறங்களில் கூடியிருந்தனர்.

1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு அந்த பதவிக்காக ஏழாவது முறையாக இந்த தேர்தல் நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசுடன்...

கடந்த சில நாட்களுக்கு முன்னர் திஸ்ஸ அத்தநாயக்க ஆளும் தரப்பில் இணைந்து கொள்வார் என செய்திகள் வெளியான போதும், அப்படி ஒரு நோக்கம் தனக்கு இல்லை என்று திஸ்ஸ அத்தநாயக்க மறுத்திருந்தார்.

இதேவேளை சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கெட்டகொடவும் அரசாங்கத்தில் இணைந்து கொண்டுள்ளார். அத்துடன் ஐ.தே.கவின் ஜோசப் மைக்கல் பெரேராவும் அரசுடன் இணைந்துகொள்ளவுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க அறிவித்துள்ளார். திஸ்ஸ அத்தநாயக்க பதவியை ராஜினாமா செய்து ஆளுங்கட்சியில் இணைந்ததை அடுத்தே இவ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (எ-11)

## பாப்பரசரின்...

வுள்ள நிலையில், 13ஆம் திகதி புனித பாப்பரசரின் இலங்கைக்கான பயணம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், புனித பாப்பரசர் அரசியல் பொறிக்குள் வீழ்வதை அனுமதிக்க வேண்டாம என்று வத்திக்கானுக்கு கடிதம் எழுதவுள்ளதாக கிறிஸ்தவ ஒற்றுமை அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-11)

## சர்வதேச...

மீதான இராணுவ ஆக்கிரமிப்புக்கெதிராகவும், தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இன அழிப்புக்கு எதிராகவும்,

மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் சர்வதேச மனித உரிமைகள் நாள் ஒன்றுகூடலை ஒழுங்குபடுத்தியுள்ளோம்.

அன்றைய தினம் "செம்மஞ்சள்" நிற ஆடைகளுடன் ஒன்றுகூடலில் கலந்து கொண்டு சர்வதேச சமூகத்தோடு இணைந்து பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராகவும் தமிழ் இனஅழிப்புக்கு எதிராகவும் குரல் கொடுக்க அனைவரையும் அணி திரளுமாறு உரிமையோடு அழைக்கின்றோம் என்றுள்ளது. (எ-11)

## கை கொடுக்க...

மைத்திரிபால சிறிசேனவிற்கு இன்முகத்துடன் கை கொடுக்கும் போது அதனை மைத்திரிபால சிறிசேன மறுத்துள்ளார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வருகை தந்த மகிந்த ராஜபக்ஷ, அங்கு வருகை தந்திருந்த பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை பார்த்து இன்முகத்துடன் கை கொடுக்கச் சென்ற வேளை மைத்திரிபால சிறிசேன அதனை மறுத்து கைகளைக் கூப்பி வணக்கம் தெரிவித்துள்ளார். (எ-11)


யாழ் மண்ணில் உதயமாகிறது
வர்த்தகப் பிரிவிற்கேயான தனித்துவமான ஒரே ஒரு நிறுவனம்
ECONOMICS HALL
நாவலர் றோட், யாழ்ப்பாணம்; ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
ஆரம்பம் 11.12.2014-காலை 9.00
பொருளியல் உதயன்
கணக்கீடு AP. பகீரதன்
வணிகக்கல்வி யசோதரன்
உயர்தரமாக்குவதே எம் உயர்தரக் கற்கை
(8591)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org